SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

# மாலை எக்ஸ்பிரஸ்

குரோதி வருடம் மாசி 24
MAALAI EXPRESS
மாநிலம் பயனுற!
ஹிஜ்ரி 1446 ரமலான் 7

மல்டிகலர் பைகள்
துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:- 98423 35007

/maalaiexpressnews
● புதுச்சேரி ● சனிக்கிழமை, மார்ச் 8, 2025 ● வெளியூர்: 9-3-2025, ஞாயிற்றுக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 232 ● 8 பக்கம் ● ரூ.6

## 1 லட்ச ரூபாய் வரை மானியம்

# சர்வதேச மகளிர் தினத்தில் பிங்க் நிற ஆட்டோ திட்டம்



### முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்

**சென்னை, மார்ச் 8-**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி பிங்க் நிற ஆட்டோ திட்டத்தை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார். சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சியில் பிங்க் நிற ஆட்டோ திட்டத்தை தொடங்கி வைத்தார்.

முதற்கட்டமாக 100 பிங்க் நிற ஆட்டோக்கள், 150 மஞ்சள், நீல நிற ஆட்டோக்களை பெண்களுக்கு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்த திட்டத்தில் பெண்கள் ஆட்டோக்கள் வாங்க தமிழக அரசு தலா 1 லட்ச ரூபாய் வரை மானியம் வழங்குகிறது.

தலைநகர் சென்னையில் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், பெண்களுக்கு சுயதொழில் வேலை வாய்ப்பை உருவாக்கி கொடுக்கவும் பிங்க் நிற ஆட்டோ திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இந்த ஆட்டோக்களில் ஜிபிஎஸ் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக மகளிர் தினம்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட வாழ்த்துப்பதிவு

**சென்னை, மார்ச் 8-**

சர்வதேச மகளிர் தினம் இன்று (சனிக்கிழமை) கொண்டாடப்படுவதை ஒட்டி தமிழக அரசியல் கட்சி தலைவர்கள் வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில் தமிழக அரசின் சார்பில் பெண்களுக்கான பல்வேறு நலத்திட்டங்களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். அதன்படி சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை சார்பில் கடந்த ஆண்டு சட்டசபை கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட மகளிர் 'பிங்க் ஆட்டோ' திட்டத்தை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெறும் 'உலக மகளிர் தின விழா' நிகழ்ச்சியில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.

இந்நிலையில் மகளிர் உரிமைத்தொகை முதல் புதுமைப்பெண் திட்டம் வரை தமிழக அரசின் பெண்களுக்கான நலத்திட்டங்களைப் பட்டியலிட்டு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் மகளிர் தின வாழ்த்தை வீடியோவாக பதிவிட்டுள்ளார்.

இதுதொடர்பான அந்த வீடியோவில் பேசி உள்ள முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "வணக்கம். நலமா? மாதந்தோறும் 1 கோடியே 16 லட்சம் சகோதரிகள் ரூ.1000 உரிமைத் தொகை பெறுகிறார்கள். தாய்வீட்டு சீர் மாதிரி எங்கள் அண்ணன் ஸ்டாலின் தரும் மாதாந்திர சீர் என்று எந்நேரமும் தமிழ் சகோதரிகள் மனம்மகிழ சொல்றாங்க. அது தான் விடியலின் ஆட்சி.

ஆட்சிப் பொறுப்பேற்றதும் நான் இட்ட முதல் கையெழுத்தே மகளிருக்கான கட்டணமில்லா விடியல் பயணத் திட்டத்துக்கு தான். இந்த விடியல் பயணமானது. மகளிரின் சேமிப்பை அதிகரித்துள்ளது. அரசுப் பள்ளியில் படித்த பெண் பிள்ளைகள் பலர் கல்லூரிக்குச் செல்ல முடியாத நிலையை மாற்றி உயர்கல்வியைப் பயில உருவாக்கப்பட்ட திட்டம் தான் புதுமைப்பெண் திட்டம். தமிழ்நாடு மாணவ, மாணவிகள் என்னை அப்பா, அப்பா என்று வாய் நிறைய அழைக்கும்போது அளவில்லா மகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பாச உணர்வுதான் முக்கியம். அன்புச் சகோதரிகள் அனைவருக்கும் உலக மகளிர்தின வாழ்த்துகள்" என்று அதில் அவர் கூறியுள்ளார்.

## நாளை தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம்: நாடாளுமன்ற நடவடிக்கை குறித்து முக்கிய முடிவு

**சென்னை, மார்ச் 8-**

நாடாளுமன்றத்தில் கடந்த மாதம் (பிப்ரவரி) 1ந் தேதி மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன், 20252026ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்தார். தொடர்ந்து, அம்மாதம் 13ம் தேதி வரை பட்ஜெட் கூட்டத்தொடர் நடைபெற்றது.

இந்த நிலையில், வரும் திங்கட்கிழமை (10ந் தேதி) நாடாளுமன்றம் மீண்டும் கூட இருக்கிறது. அப்போது பட்ஜெட் மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. இந்த விவாதத்தில் பங்கேற்று ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேச இருக்கிறார்கள்.

இந்த நிலையில், தி.மு.க. எம்.பி.க்கள் கூட்டம் நாளை (ஞாயிற்றுக்கிழமை) சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் என கட்சியின் பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவித்துள்ளார். தி.மு.க. தலைவரும், முதல் அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில், நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரில் தி.மு.க. எம்.பி.க்களின் செயல்பாடு எவ்வாறு இருக்க வேண்டும்?. எந்தெந்த பிரச்சினைகள் குறித்து பேச வேண்டும்?. யார் யார் பேசுவது? என்பது குறித்து முடிவு எடுக்கப்பட உள்ளது.

## வார இறுதியில் உயர்ந்த தங்கம் விலை



**சென்னை, மார்ச் 8-**

சர்வதேச பொருளாதார நிலவரத்துக்கு ஏற்ப இந்தியாவில் தங்கத்தின் விலை அவ்வப்போது ஏற்ற, இறக்கத்தை சந்தித்து வருகிறது. இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்தே தங்கத்தின் விலை யாரும் எதிர்பார்க்காத வகையில் உயர்ந்தவாறு இருக்கிறது. கடந்த மாதம் (பிப்ரவரி) 11ந் தேதி தங்கம் விலை முதன் முறையாக பவுனுக்கு ரூ.64 ஆயிரத்தை தாண்டி புதிய உச்சத்தை எட்டியது.

இந்த சூழலில், நேற்று (வெள்ளிக்கிழமை) தங்கம் விலை கிராமுக்கு ரூ.30 குறைந்து, ஒரு கிராம் ரூ.8,030க்கும், சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ரூ.64,240க்கும் விற்பனை செய்யப்பட்டது வந்தது.

இந்நிலையில், இன்று (சனிக்கிழமை) தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.8,040க்கும், சவரனுக்கு ரூ.80 உயர்ந்து, ஒரு சவரன் ரூ.64,320க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலை மட்டும் எந்த மாற்றமும் இன்றி ஒரு கிராம் வெள்ளி ரூ.108க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,08,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## ராஜேந்திரபாலாஜி மிரட்டல் பேச்சு: எடப்பாடி பழனிசாமியை சந்தித்த மாஃபா பாண்டியராஜன்

**சென்னை, மார்ச் 8-**

விருதுநகரில் கடந்த 5ந்தேதி இரவு அ.தி.மு.க. பொதுக்கூட்டம் நடந்தது. இதில் முன்னாள் அமைச்சர் கே.டி.ராஜேந்திர பாலாஜிக்கு கட்சி நிர்வாகிகள் பொன்னாடை அணிவித்து வெள்ளி வாள் வழங்கினர். பலரும் பொன்னாடை அணிவிக்க வந்தனர்.

இதே போல் விருதுநகர் பாண்டியன் நகரை சேர்ந்த கிழக்கு ஒன்றிய எம்.ஜி.ஆர். மன்ற துணைச்செயலாளர் நந்தகுமாரும் பொன்னாடை அணிவிக்க வந்துள்ளார். வரிசையில் வராமல் முந்திக்கொண்டு அவர் வந்ததாக கூறப்படுகிறது. இதனால் அவரை ராஜேந்திரபாலாஜி கண்டித்ததாகவும், பின்னர் அவரை கன்னத்தில் அறைந்ததாகவும் பரபரப்பு ஏற்பட்டது.

மேலும் அவரிடம் எதற்காக இப்படி முந்தி கொண்டு வருகிறாய்? என சத்தம் போட்டதாகவும் கூறப்படுகிறது.



கூட்டத்தில் பேசிய கே.டி.ராஜேந்திர பாலாஜி,


பாண்டியராஜன் கூறுவது போல் நான் குறுநில மன்னன்தான். வெவ்வேறு கட்சியில் இருந்து வந்தவர் பாண்டியராஜன். நான் தெய்வமாக நினைக்கும் ஜெயலலிதா குறித்து பாண்டியராஜன் அவதூறாக பேசிய வீடியோ என்னிடம் உள்ளது என்று மிரட்டும் தொனியில் பேசினார்.

இந்த சம்பவம் கூட்டத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், முன்னாள் அமைச்சர் மாஃபா பாண்டியராஜன் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை நேற்று இரவு சந்தித்தார்.

சென்னை பசுமை வழிச்சாலையில் உள்ள எடப்பாடி பழனிசாமியின் வீட்டிற்கு சென்ற மாஃபா. பாண்டியராஜன் அவரை சந்தித்து பேசி உள்ளார். மாஃபா பாண்டியராஜனை, ராஜேந்திரபாலாஜி விமர்சித்த நிலையில் இந்த சந்திப்பு நடந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## புதுக்கோட்டை: மூன்று வாகனங்கள் மோதி விபத்து-3 பேர் உயிரிழப்பு



**புதுக்கோட்டை, மார்ச் 8-**

புதுக்கோட்டை மாவட்டம், நமணசமுத்திரம் அருகே திருச்சிகாரைக்குடி தேசிய நெடுஞ்சாலையில் 2 கார்கள் மற்றும் 1 சிறிய ரக சரக்கு வாகனம் என மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். மேலும், விபத்தில் படுகாயம் அடைந்த 5 பேரை மீட்ட பொதுமக்கள், அவர்களை சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தனர். இந்த விபத்து தொடர்பாக தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த சடலக்கலை போலீசார் காரில் வந்தவர்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள் என்பது குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மூன்று வாகனங்கள் ஒன்றோடு ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில் 3 பேர் உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

முதல்வர் பிறந்தநாள் அன்று

# திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் பிறந்த 30 குழந்தைகளுக்கு தங்க மோதிரம்

## அமைச்சர் எ.வ.வேலு அணிவித்தார்



திருவண்ணாமலை, மார்ச் 8-

திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சர் பிறந்தநாள் அன்று பிறந்த 30 குழந்தைகளுக்கு தங்க மோதிரத்தை அமைச்சர் எ.வ.வேலு அணிவித்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் திமுக சார்பில் தமிழ்நாடு முழுவதும் கொண்டாடப்பட்டதோடு ஏழை எளியோர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டன. அதன்படி திருவண்ணாமலை தெற்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் விழா கடந்த 1ந் தேதி வெகுவிமர்சையாக கொண்டாடப்பட்டது.

அதையொட்டி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இயங்கிவரும் ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் பச்சிளங் குழந்தைகள் தீவிர சிகிச்சை மையத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளான 1ந் தேதி அன்று 18 பெண் குழந்தைகளும், 12 ஆண் குழந்தைகளும் என மொத்தம் 30 குழந்தைகள் பிறந்தன.

ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்சர் பிறந்தநாளன்று அரசு மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு அமைச்சர் எ.வ.வேலு தங்க மோதிரம் அணிவித்து வருகிறார். அதன்படி திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் முதலமைச்சர் பிறந்தநாளன்று பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு தலைமையேற்று தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ் சாலை அமைச்சர் எ.வ.வேலு 30 குழந்தைகளுக்கு ஒரு கிராம் தங்க மோதிரம் அணிவித்து நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்.எஸ்.தரணிவேந்தன், சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் மு.பெ.கிரி, பெ.சு.தி.சரவணன் ஓ.ஜோதி, எஸ்.அம்பேத்குமார், மாநில மருத்துவரணி துணைத் தலைவர் எ.வ.வே.கம்பன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் அரிகரன், மருத்துவ கண்காணிப்பாளர் மாலதி, நிலைய மருத்துவ அதிகாரி கதிர், மகப்பேறு மருத்துவமனை தலைவர் அருமைக்கண்ணு, ஒருங்கிணைப்பாளர் அருணாச்சலம் சாந்தி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கௌதமன், உதவி செயற்பொறியாளர் கோபாலகிருஷ்ணன், தொமுச பேரவை செயலாளர் க.சௌந்தர்ராஜன், மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# குறத்தியம்மன் கோயில் கும்பாபிஷேக விழா: நடிகர் பரதன் பங்கேற்பு





புதுக்கோட்டை, மார்ச் 8-

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கொத்தமங்கலம் சிதம்பரவிடுதியில் குறத்தியம்மன் கோயில் நிலைகால் விழாவிற்கும், புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி உட்பட்ட முள்ளங்குறிச்சி ஊராட்சி சாளுவன்விடுதி கிராமத்தில் பாலகணபதி, பாலமுருகன், கருப்பர், பட்டவர் சுவாமி அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேக விழா நடந்தது.

திரைப்பட நடிகரும் தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்கத்தின் மாநில இளைஞரணி தலைவர் பரதன் தலைமையில் சிறப்பாக நடைப்பெற்றது. தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்கத்தின் புதுக்கோட்டை மாவட்ட தலைவர் திருக்கட்டளை பாலா அறிவுறுத்தல்படி பரதனுக்கு உற்சாக வரவேற்பு கொடுக்கப்பட்டது. இதில் வடகாடு அருள், மாநில இளைஞரணி துணை தலைவர் கொண்றை ஆர். கலைவாணன், தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் திருவரங்குளம் வீரமணி, புதுகை மத்திய மாவட்ட செயலாளர் சீனமங்கலம் தினேஷ் அம்பலம், புதுகை மாவட்ட இளைஞரணி தலைவர் ஆகியோர் ஒன்றிணைந்து இந்த உற்சாக வரவேற்பு ஏற்பாடுகளை செய்தனர்.

இதில் ராஜா, தஞ்சை மாவட்ட தலைவர் ஆத்மநாதன், புதுகை கிழக்கு மாவட்ட செயலாளர் மற்றும் தமிழ்நாடு முத்தரையர் முன்னேற்ற சங்க நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.

# ஸ்ரீராமகிருஷ்ணா அரசு உயர்நிலை பள்ளியில் மருத்துவ முகாம்

புதுச்சேரி, மார்ச் 8-



மகளிர் தினத்தை முன்னிட்டு ஸ்ரீ ராமகிருஷ்ணா அரசு உயர்நிலைப் பள்ளி தேங்காத் திட்டத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமில் " வேல் மொபைல் டென்டல் சர்வீஸ் பங்குபெற்று, பல் மருத்துவ முறைகள் பற்றியும், பல் நோய்களைப் பற்றிய விழிப்புணர்வும், வாய் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வும் ஏற்படுத்தி கிராமத்து மக்களுக்கு தேவையான பல் சிகிச்சையும் செய்தனர். இதில் பேராசிரியர் டாக்டர் தங்கவேலு, முகம் தாடை அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் டாக்டர் மலர்கொடி டாக்டர் அனிதா, டாக்டர் சீட்டல் குமார் மற்றும் அனைவரும் கலந்துகொண்டு கிராமத்து மக்களுக்கு வேண்டிய மருத்துவ உதவிகளையும், விழிப்புணர்வையும் செய்தனர். இவ்விழாவினை ஏற்பாடு செய்த அரிமா சங்கத்தினருக்கு தங்கவேலு நன்றி கூறினார்.

# இந்தியாவிலேயே விளையாட்டில் தமிழகம் 2ம் இடத்தில் வந்துள்ளது

## தயாநிதி மாறன் எம்பி பேச்சு





புதுக்கோட்டை, மார்ச் 8-

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அருகே வேம்பங்குடியில் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு கைப்பந்து கழகம் சார்பில் மாநில அளவிலான மின்னொளி கைப்பந்து போட்டி நாடளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் தொடங்கி வைத்தார். 7வது ஆண்டாக நடைபெற்ற போட்டியில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 8 அணிகள் பங்கேற்றன. திமுக மாநில விளையாட்டு மேம்பட்டு அணி செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான தயாநிதிமாறன். சட்டத்துறை அமைச்சர் ரகுபதி, பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்யநாதன் ஆகியோர் போட்டியை தொடங்கி வைத்தனர். அப்போது அமைச்சர்கள் ரகுபதி, மெய்யநாதன் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் அனைத்திற்கான அணிகள் உள்ளது. குறிப்பாக 23 அணிகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதில் விளையாட்டுத் துறை மகளிர் அணி மாணவர் அணி என பல்வேறு பகுதிகளில் மக்களுக்காக இயங்கும் ஒரே இயக்கம் இந்தியாவிலேயே தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் செயல்படுகிறது. அமைச்சர்கள் பெருமிதம் செய்து தமிழக அரசின் சாதனைகளை எடுத்து கூறினர். அதனை தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் பேசுகையில், வட இந்தியர்களுக்கு சட்டம் என்றால் என்ன என்று தெரியாது. கும்பமேளாவின்போது வட இந்தியர்கள் ரயிலில் பல்வேறு இடையூறுகளை செய்தனர். ரயில் இஞ்சின் ஓட்டுனர்களை அடித்து கீழே இறக்கிவிட்டனர். ஏனென்றால் அவர்களுக்கு கல்வி அறிவு இல்லை. சனாதனம் ஒன்றை மட்டுமே அவர்களுக்கு திணிக்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழகம் அப்படி இல்லை. பெரியார், அண்ணா, கலைஞர் தமிழகத்தில் அனைவரும் படித்தவர்கள். பாஜக.வினருக்கு ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லை. சர்வாதிகாரத்தின் மூலம் நம்மை வீழ்த்த நினைக்கின்றனர்,

அதை முறியடிக்கும் வகையில் தான் இதை ஏற்க முடியாது என தமிழக முதலமைச்சர் அனைத்து கட்சி கூட்டத்தைக் கூட்டி ஒரு வலிமையான எதிர்பபை வெளிப்படுத்தி உள்ளார் என்றார். முன்னதாக கைப்பந்து கழக பொருளாளர் சரவணன் வரவேற்றார். கட்சி நிர்வாகிகள், துணைச் செயலாளர்கள் ஞான இளங்கோவன், அண்ணாதுரை, அறந்தாங்கி ஒன்றிய பெருந்தலைவர் சண்முகநாதன், கிழக்கு ஒன்றிய செயலாளர் சிவகுமார், மேற்கு ஒன்றிய செயலாளர் தங்கமணி மற்றும் நடேசன், ஏபிடி சகாயம், டைட்டானிக் சாகுல், தங்கராஜ், சுரேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்துகொண்டனர். விழா ஏற்பாடுகளை கைப்பந்து கழக அமைப்பாளர் சிவகுருநாதன் மற்றும் பொறுப்பாளர்கள் செய்திருந்தனர்.

# சமூக வலைதளத்தில் அவதூறு வீடியோ வெளியிட்ட நக்கீரன் பிரகாசை கைது செய்ய வேண்டும்

## கோவை மாநகர காவல் துறை ஆணையரிடம் புகார்



கோவை, மார்ச் 8-

கோவையில் ராஷ்ட்ரிய ஸனாதன சேவா சங்கம், பிராமின் அசோசியேஷன் மற்றும் ஆதி சைவ சிவாச்சாரியார் கூட்டமைப்பு சார்பில் கோவை மாநகர காவல் துறை ஆணையரிடம் ராஷ்ட்ரீய ஸனாதன சேவா சங்க நிறுவனத் தலைவரும் அகில பாரத மக்கள் கட்சி தலைவருமான முனைவர் ராமநாதன் தலைமையில் நக்கீரன் பிரகாஷ் என்பவரை கைது செய்ய வேண்டுமென்று மாநகர காவல் ஆணையரிடம் புகார் அளித்தனர்.

புகார் மனுவில், கோவில் கருவறையில் அர்ச்சகர்கள் கழிக்கும் சிறுநீர் தான் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் குடித்து தலையில் தேய்க்கும் தீர்த்தம். அர்ச்சகர்களையும், இந்துக்களையும் அவமதித்து நக்கீரன் பிரகாஷ் என்பவர் பேசிய வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றது. பிராமண சமுதாயத்தினர் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள் மற்றும் இந்துக்களை இழிவுபடுத்தும் நோக்கில் பேசியதால் காவல்துறையினர் உடனடியாக அவரை கைது செய்ய வேண்டும் என்று புகார் அளித்துள்ளனர். இந்நிகழ்வில் அகில பாரத மக்கள் கட்சி மாவட்ட துணை தலைவர் நாராயணசாமி, சிவசேனா மாநில துணை தலைவர் பூக்கடை ஆனந்த், ஆதிசைவ சிவாச்சாரியார் கூட்டமைப்பு தலைவர் ஜே.மணிகண்டன், செயலாளர் செல்லமுத்து குமார், ஒருங்கிணைப் பாளர்கள் ரவிச்சந்திரன், கல்யாணசுந்தரம், பாலு சுப்பிரமணியம், சபரிநாத், வினோத், சிவசேனா மாநில செயலாளர் ரமேஷ், திருப்பூர் மாவட்ட துணை தலைவர் சந்தனகுமார் பாலசுப்பிரமணியம் குருக்கல், நிர்வாகி கண்ணன் உட்பட்ட பலர் கலந்துகொண்டு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

தலையங்கம்

மாலை எக்ஸ்பிரஸ்

8.3.2025 (சனிக்கிழமை)

# பொருளாதார ஆய்வறிக்கை

ஆண்டுதோறும் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்படுவதற்கு முந்தைய நாள் அதாவது பட்ஜெட் கூட்டத்தொடரின் முதல் நாளில் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படும். இந்த ஆய்வறிக்கையை நாடே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கும். ஏனெனில் இந்த ஆய்வறிக்கையில் நாட்டின் பொருளாதார நிலைமை, அரசாங்க திட்டங்களின் செயல்பாடுகள், ஒட்டுமொத்த வளர்ச்சி, விவசாய உற்பத்தி வளர்ச்சி, தொழில் மேம்பாடு உள்ளிட்ட அனைத்து துறைகளின் பங்களிப்பு குறித்து தெரிந்து கொள்ளமுடியும். மொத்தத்தில் இது நாட்டின் பொருளாதார நிலையை தெளிவாக காட்டும் காலக்கண்ணாடி என்றே சொல்லலாம்.

இதை நிதி மந்திரி தாக்கல் செய்தாலும் நாட்டின் தலைமை பொருளாதார ஆலோசகர்தான் தயாரிப்பார். நாடாளுமன்ற விவாதங்களில் உறுப்பினர்கள் பேசும்போது இந்த பொருளாதார ஆய்வறிக்கையின் அம்சங்கள் இடம்பெற்று இருக்கும். ஆளுங்கட்சி உறுப்பினர்கள் தங்கள் அரசாங்கத்தின் சாதனைகளை இந்த ஆய்வறிக்கையில் உள்ள அம்சங்களை மேற்கோள் காட்டி பேசுவார்கள். எதிர்க்கட்சியினர் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகளை எடுத்துக்கொண்டு அரசாங்கத்தின் மீது கண்டன கணைகளை வீசுவார்கள். இத்தகைய பொருளாதார ஆய்வறிக்கைகள் பல மாநில சட்டசபைகளிலும் தாக்கல் செய்யப்படுகிறது.

ஆந்திராவில் சமூக பொருளாதார ஆய்வறிக்கை என்ற பெயரிலும், தெலுங்கானாவில் சமூக பொருளாதார கண்ணோட்டம் என்ற பெயரிலும், கர்நாடகா மற்றும் கேரளாவில் பொருளாதார ஆய்வறிக்கை என்ற பெயரிலும் ஆண்டுதோறும் பட்ஜெட் கூட்டத்தொடரின்போது தாக்கல் செய்யப்படுகிறது. தமிழ்நாட்டில் மட்டும் இதுவரை எந்த அரசுகளும் இதுபோல பொருளாதார ஆய்வறிக்கையை தாக்கல் செய்யவில்லையே என்ற குறை இருந்தது. அந்தக்குறையை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் போக்கிவிட்டார். இந்த ஆண்டு முதல் மாநிலத்தின் பொருளாதார ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. பட்ஜெட் தாக்கல் செய்யப்படும் வருகிற 14ந்தேதியன்றே இந்த பொருளாதார ஆய்வறிக்கையும் முதன் முதலாக தாக்கல் செய்யப்பட உள்ளது.

தமிழக திட்டக்குழு உதவியுடன் நிதித்துறை இந்த ஆய்வறிக்கையை தயாரித்துள்ளது. தமிழக அரசு தாக்கல் செய்யப்போகும் பொருளாதார ஆய்வறிக்கையில் விரிவான பொருளாதார நிலைமைகள் பிரதிபலிக்கப்படும். விவசாயம், கால்நடை, வனம், மீன் வளர்ப்பு, சுரங்கம் போன்ற தொழில்கள் மட்டுமல்லாமல் உற்பத்தி, மின்சாரம், எரிவாயு, நீர் வினியோகம், கட்டுமானம் பொது நிதி, விலைவாசி, ஏழ்மை, வேலைவாய்ப்பு, நீடித்த வளர்ச்சி இலக்குகள் போன்ற பல தலைப்புகளில் இந்த ஆய்வறிக்கை தாக்கல் செய்யப்பட இருக்கிறது. இந்த துறைகளில் எல்லாம் தமிழ்நாடு எந்த இடத்தில் இருக்கிறது? எவ்வளவு வளர்ச்சி அடைந்துள்ளது? இன்னும் எவ்வளவு வளர்ச்சி அடைய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது? என்பதோடு அரசின் ஒவ்வொரு திட்டங்களும் எந்த அளவில் மக்களை சென்றடைந்து இருக்கிறது, அதனால் என்ன பலன் கிடைத்து இருக்கிறது என்பது போன்ற பல விவரங்களை இந்த ஆய்வறிக்கையில் காணலாம்.

இது ஒரு தொடக்கம்தான் என்றாலும், இதை அடிப்படையாக வைத்து அடுத்து வரும் ஆண்டுகளில் தாக்கல் செய்யப்படும் பொருளாதார ஆய்வறிக்கைகளில் கூறப்பட்டுள்ள அம்சங்களை ஒப்பிட்டு பார்த்து தமிழகத்தின் வளர்ச்சியை அறிந்துகொள்ள முடியும்.

# அமெரிக்க பொருட்களுக்கான வரியை குறைக்க இந்தியா சம்மதித்துள்ளது: டிரம்ப்

புதுடெல்லி, மார்ச் 8-

அமெரிக்கா மீது இந்தியா, பிரேசில், சீனா உள்ளிட்ட நாடுகள் அதிக வரி விதிக்கிறது என்றும் இந்தியா 100 சதவீத வரி விதிக்கிறது என்றும் அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

இதையடுத்து இந்தியா உள்ளிட்ட நாடுகள் மீது பரஸ்பர வரி விதிப்பு ஏப்ரல் 2ந்தேதி முதல் தொடங்கும் என்று சமீபத்தில் அறிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்கா மீதான வரிகளை குறைக்க இந்தியா சம்மதித்துள்ளது என்று டிரம்ப் தெரிவித்துள்ளார்..

வெள்ளை மாளிகையில் டிரம்ப் நிருபர்களுக்கு பேட்டி அளித்தபோது கூறியதாவது:

இந்தியா எங்களிடம் மிகப்பெரிய அளவில் வரிகளை வசூலிக்கிறது. இதனால் இந்தியாவில் எந்த பொருட்களையும் விற்க முடியாத சூழல் உள்ளது. தற்போது இந்தியா தனது வரிகளை குறைத்து கொள்ள ஒப்புக் கொண்டுள்ளது.

இதன்மூலம் அவர்கள் என்ன செய்தார்களோ அதை அம்பலப்படுத்தி உள்ளனர். பதிலுக்கு பதில் வரி விதிப்பதாக கூறிய நிலையில் இந்தியா வரிகளை குறைக்க விரும்புவதாக தெரிவித்துள்ளது.

கனடா நாடு அமெரிக்காவின் பால் பொருட்களுக்கு 250 சதவீதம் வரை வரி விதிக்கிறது. இதை ஏற்கவே முடியாது. யாரும் அதனை பேசவே இல்லை. இனி இதுபோல் நடக்கவே கூடாது. அவர்கள் எவ்வளவு வரி விதிக்கிறார்களோ அதேபோல் நாமும் வரி விதிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறி னார்.

இதற்கிடையே இந்தியா தனது விவசாய வர்த்தகத்தை இறக்குமதிகளுக்கு திறந்து விட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தி வருகிறது குறிப்பிடத்தக்கது.

# போக்குவரத்து துறையில் இளநிலை பொறியாளர் தேர்வு

**புதுச்சேரி, மார்ச் 8-**

புதுச்சேரி போக்குவரத்து துறையில் இளநிலை பொறியாளர், துணை மோட்டார் வாகன ஆய்வாளர் பணியிடத்திற்கான தேர்வு வரும் 16ம் தேதி நடக்கிறது.

பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறை அரசு சார்பு செயலர் ஜெய்சங்கர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில், புதுச்சேரி போக்குவரத்து துறையில் இளநிலை பொறியாளர், துணை மோட்டார் வாகன ஆய்வாளர் பணியிடத்திற்கான தேர்வு வரும் 16ம் தேதி, பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில் நடக்கிறது. இத்தேர்வுக்கான அனுமதி சீட்டை தேர்வர்கள் https://recruitment.py.gov.in என்ற அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

மேலும், விவரங்கள் அல்லது உதவி தேவைப்பட்டால் அனைத்து வேலை நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை 0413 –2233338 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திமுக மகளிர் அணி, மகளிர் தொண்டரணி சார்பில் சர்வதேச மகளிர் தின விழா

## எதிர்க்கட்சி தலைவர் சிவா பங்கேற்பு



**புதுச்சேரி, மார்ச் 8-**

புதுச்சேரி மாநில திமுக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் சர்வதேச மகளிர் தின விழா வில்லியனூர் தொகுதிக்கு உட்பட்ட சுல்தான்பேட்டை தனியார் திருமண நிலையத்தில் நேற்று மாலை நடந்தது. விழாவிற்கு, மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமை வகித்தார். பொதுக்குழு உறுப்பினர்கள் அமுதா குமார், நர்கீஸ், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சுமதி, மகளிர் அணித் தலைவர் சந்திரகலா, துணைத் தலைவர் பிரியதர்ஷினி, மகளிர் தொண்டரணி தலைவர் சத்யா, மகளிர் தொண்டர் அணி துணைத் தலைவர் விஜயலட்சுமி, துணை அமைப்பாளர்கள் ரமா, புஷ்பலதா, நல் குணா, தேன்மொழி, காமாட்சி, கல்யாணி, சமூக வலைதள பொறுப்பாளர், புஷ்பலதா, மகளிர் தொண்டர் அணி சுமித்ரா, ஜெயபாரதி, குப்பம்மாள், கஸ்தூரி, அரசம்மாள், ராஜலட்சுமி, சித்ரா, புவனேஸ்வரி, தைலம்மை ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் அருட்செல்வி வரவேற்று பேசினார். விழாவில், திமுக தலைமை நிலைய மக்கள் செய்தித் தொடர்பு பிரிவு மாநில துணைத் தலைவர் ஆண்டாள் பிரியதர்ஷினி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இதில், அவைத் தலைவர் எஸ்.பி. சிவக்குமார், மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத் எம்.எல்.ஏ., துணை அமைப்பாளர் தைரியநாதன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ.மூர்த்தி, நந்தா. சரவணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், முன்னாள் பாராளுமன்ற செயலர் பூ.மூர்த்தி, கே.எம்.பி. லோகையன், பொதுக்குழு உறுப்பினர்கள் கோபால், கார்த்திகேயன், சக்திவேல், தங்கவேலு, தர்மராஜன், கோபாலகிருஷ்ணன், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், நடராஜன், சக்திவேல், தியாகராஜன், வடிவேல், ராஜாராமன், இளஞ்செழியபாண்டியன், ராதாகிருஷ்ணன், அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி. மணிமாறன், அணி வீரன் (எ) விரய்யன், விவசாய அணி குலசேகரன், வர்த்தகர் அணி ரமணன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, ஆதிதிராவிடர் நலக்குழு ஆறுமுகம் உள்ளிட்ட அணி அமைப்பாளர்கள், அணித் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

கூட்டத்தில், இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம். தாய்மொழிகளை விழுங்கும் இந்தி மொழி ஆதிக்கத்தை திணிக்கும் ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவிப்பது, புதுச்சேரியில் பாலின சமத்துவ வேறுபாடுகளை திணித்து பெண்களுக்கான உரிய மரியாதை அளிக்காமல், அதிகார பதவிகளில் கைப்பாவைகள் நியமிப்பதையும், உழைக்கும் மகளிருக்கான உரிய ஊதியம் வழங்காத நிறுவனங்கள் மீது நடவடிக்கை எடுக்க தயங்கும் மகளிர் குழந்தைகள் மேம்பாட்டு துறை மற்றும் தொழிலாளர் நலத்துறைக்கு கண்டனம் தெரிவிப்பது, புதுச்சேரி பெண்களுக்கான பிங்க் பேருந்துகள் இயக்க வலியுறுத்துவது, புதுச்சேரியில் மூடப்பட்ட ரேஷன் கடைகளை முறையாக திறந்து மலிவு விலையில் மளிகைப் பொருட்கள் வழங்க வேண்டும். புதுச்சேரியில் பெண்கள் மற்றும் குழந்தைகள் பாதுகாப்பை உறுதி செய்திட போஷ் சட்டம் மற்றும் போக்சோ சட்டம் குறித்து விழிப்புணர்வை புதுச்சேரி அரசு ஏற்படுத்த வேண்டும். 2026 சட்டமன்ற தேர்தலில் நமது கழகத்தலைவர் காட்டும் வழியில் புதுச்சேரியில் திராவிட மாடல் ஆட்சி அமையவும், பாஜக கூட்டணி ஆட்சியின் அவலங்களை மக்கள் மன்றத்தில் எடுத்துக்கூற கழக மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி சார்பில் திண்ணை பிரச்சாரம் மற்றும் தெருமுனைப் பிரச்சாரங்கள் செய்வது என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் முடிவில் வில்லியனூர் தொகுதி செயலாளர் மணிகண்டன் நன்றி கூறினார்.

# சமுதாயக்கூடம் கட்ட அடிக்கல் நாட்டு விழா



**மதுரை, மார்ச் 8-**

விருதுநகர் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட மதுரை மாநகராட்சி 89வது வார்டு சிந்தாமணி பகுதியில் ரூ.25 லட்சம் மதிப்பீட்டில் சமுதாயக்கூடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்வில் விருதுநகர் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் மாணிக்கம் தாகூர் கலந்துகொண்டு சமுதாயக்கூடம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார். இதில் மதுரை தெற்கு மண்டல தலைவர் முகேஷ் சர்மா, அருகில் உள்ள பகுதி அவை தலைவர் பி எம் கணேசன் 89வது வட்டச் செயலாளர் பிஎம்ஜி சரத்குமார், திமுக மூத்த உறுப்பினர் ஜிகே வாசு, 89வது வார்டு அதிமுக கவுன்சிலர் கவிதா செல்வம், மாநகராட்சி உதவி பொறியாளர், வழக்கறிஞர்கள், திமுக மூத்த நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

# பிரதம மந்திரி இண்டர்ன்ஷிப் திட்டம் குறித்து ஆய்வுக்கூட்டம்



வேலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுத் கழகத்தின் சார்பாக முன்னணி நிறுவனங்களில் மாணவ, மாணவிகளுக்கு ஊக்கத்தொகையுடன் கூடிய வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கும் பிரதம மந்திரி இண்டர்ன்ஷிப் திட்டம் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அருகில் மாநகராட்சி ஆணையாளர் ஜானகி ரவீந்திரன், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக உதவி இயக்குநர் (வேலூர்) காயத்ரி.

# பணிக்குழு, தேர்வுக்குழு உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் முன்னாள் படை வீரர் நல அலுவலகத்தின் சார்பில் முன்னாள் படைவீரர்கள் மற்றும் சார்ந்தோர்கள் பயன்பெறும் வகையில் தொடங்கப்பட்டுள்ள "முதல்வரின் காக்கும் கரங்கள்" திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரர் (முன்னாள் படைவீரர்கள், சார்ந்தோர்கள்)களை தேர்வு செய்வது தொடர்பாக மாவட்ட அளவிலான பணிக்குழு, தேர்வுக்குழு உறுப்பினர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் தலைமையில் நடைபெற்றது.

# அரசின் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சி



புதுக்கோட்டை மாவட்டம், ஒன்றியம், வாகவாசல் கிராமத்தில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சி நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# மினி பேருந்து விண்ணப்பதாரர்களுக்கு அங்கீகார கடிதம் வழங்கல்



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா குலுக்கள் முறையில் தேர்வு செய்யப்பட்ட மினி பேருந்து விண்ணப்பதாரர்களுக்கு அங்கீகார கடிதத்தினை வழங்கினார்.

### ரூ.20 கோடி மதிப்பில்

# திருவண்ணாமலை அரசு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை மையம் கட்டும் பணி தீவிரம்



**திருவண்ணாமலை, மார்ச் 8-**

திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை மையம் ரூ.20 கோடி மதிப்பில் கட்டும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு வழிகாட்டுதலின்பேரில் திருவண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் பொதுப்பணித்துறை மூலம் தேசிய சுகாதார இயக்க திட்டத்தின்கீழ் 50 படுக்கைகள் கொண்ட தீவிர சிகிச்சை மையம் ரூ.20 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. இந்த பணிகளை செயற்பொறியாளர் கௌதமன், உதவி செயற்பொறியாளர் கோபால கிருஷ்ணன் ஆகியோர் நேற்று ஆய்வு மேற்கொண்டனர். அப்போது செயற்பொறியாளர் கூறுகையில், மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டுவர ஏப்ரல் மாதத்திற்குள் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். இந்த புதிய கட்டிடத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் விரைவில் திறந்து வைக்கவுள்ளார் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. என்றார்.

# திருவாண்டார்கோவில் அரசு பெண்கள் பள்ளியில் சாரணர் பயிற்சி முகாம்



**புதுச்சேரி, மார்ச் 8-**

புதுவை மாநிலம் திருவாண்டார் கோவில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் பாரத சாரண, சாரணிய இயக்கத்தின் சார்பாக இரண்டு நாள் உண்டு உறைவிட சாரணர் பயிற்சி முகாம் நடைபெற்றது. பயிற்சி முகாமின் முதல் நாள் சாரணர்கள் திருவாண்டார்கோவிலில் அமைந்துள்ள சிவன் கோயிலுக்கு சென்று உழவாரப் பணியை மேற்கொண்டனர்.

இரண்டு நாள் பயிற்சியில் சாரணச் சைகை, குறிக்கோள், உறுதிமொழி, சாரணச் சட்டம், சீருடை அணியும் முறை, ஊதல் சைகைகள், கை சைகைகள், கை குலுக்கும் முறை, அணி முறை பயிற்சி, முடிச்சுகள், கட்டுதல், முதலுதவி, கைவினை பயிற்சி, பாடல், நடனம் மற்றும் உடற்பயிற்சி என பலவற்றில் பயிற்சி பெற்றனர். சாரணச் செயலர் ராமு, சரண ஆசிரியர் நாகபிரசாத், மாநில துணை பயிற்சி ஆணையர் முருகையன், சாரண ஆசிரியர் பச்சையப்பன், ஆசிரியர் லிங்கேஸ்வரன், ஆசிரியர் தர்மன் ஆகியோர் சாரணர்களுக்கு பயிற்சி அளித்தனர். சாரண முகாமின் நிறைவு விழாவில் பள்ளியின் துணை முதல்வர் முனைவர் சந்திரன், மாநில அமைப்பு ஆணையர் சண்முகம், தலைமை ஆசிரியர் மங்களம் மற்றும் மாவட்ட பயிற்சி ஆணையர் மோகன்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு முகாமில் முதன்மையாக திகழ்ந்த சாரணர்களுக்கு பரிசுகளை வழங்கி வாழ்த்துரை வழங்கினார்கள். முகாமிற்கான ஏற்பாடுகளை ஆசிரியர் அருள்குமார், அருள்ராஜ், சந்திரசேகரன், நடராஜன், அரசு ஆகியோர் செய்திருந்தனர்.

# அதிமுக வளர்ச்சிக்கு பாடுபட்டு மறைந்த நிர்வாகிகளுக்கு மரியாதை



**சேலம், மார்ச் 8-**

அதிமுக கழக பொதுச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி ஆணைக்கிணங்க, சேலம் மாநகர் மாவட்டம் கொண்டலாம்பட்டி பகுதி 3 வட்ட கழகத்தின் சார்பாக ஜெயலலிதாவின் 77வது பிறந்தநாள் விழா மற்றும் மறைந்த கழக நிர்வாகிகளுக்கு மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி நடந்தது. சேலம் மாநகர் மாவட்ட பொறுப்பாளரும் கழக அமைப்பு செயலாளர் சிங்காரம் வழிகாட்டுதலின்படி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்கே செல்வராஜ், சட்டமன்ற உறுப்பினர் பாலசுப்பிரமணியன், முன்னாள் மேயர் சவுண்டப்பன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சக்திவேல், முன்னாள் கவுன்சிலர் மீனாட்சி சுந்தரம், எஸ்பிஎஸ் சிவக்குமார், ஜெகதீஷ்குமார், எம்ஜிஆர் மன்ற மாவட்ட செயலாளர் நெத்திமேடு முத்து ஆகியோர் கலந்துகொண்டு களரம்பட்டி ஆட்டோ ஸ்டாண்ட் அருகில் அலங்கார பந்தலில் ஜெயலலிதாவின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செய்தார்கள்.

இதனை தொடர்ந்து கட்சி வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டு உழைத்து மறைந்த கழக நிர்வாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மறைந்த கழக நிர்வாகிகளின் புகைப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தினார்கள். பிறகு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தினார்கள்.

இந்நிகழ்வில் அவைத் தலைவர் தங்கவேல், புல்லட் லோகு, ஆறுமுகம், முருகேசன், முருகன் மற்றும் மறைந்த கழக நிர்வாகிகளின் உறவினர்கள், கழக முன்னோடிகள், வட்டக் கழக நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள் ஆகியோர் கலந்துகொண்டு மரியாதை செய்தார்கள். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்ட கழக செயலாளர் ஏஆர் ராஜேஷ் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

# பூரணாங்குப்பம் அங்காளம்மன் கோயிலில் மஞ்சள் நீராட்டு விழா-முதலமைச்சர், சபாநாயகர் பங்கேற்பு



**புதுச்சேரி, மார்ச் 8-**

புதுச்சேரி மணவெளி சட்டமன்றத் தொகுதி பூரணாங்குப்பம் அங்காளம்மன் கோயில் மாசி மாத திருவிழாவின் கடைசி நாளான மஞ்சள் நீராட்டு நிகழ்ச்சியில் முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். கோயிலுக்கு வருகை தந்த முதலமைச்சர் ரங்கசாமி, சட்டப் பேரவை தலைவர் செல்வம் ஆகியோருக்கு கோயில் நிர்வாகம் சார்பாகவும், பொதுமக்கள் சார்பாகவும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

# இருதயநோய் கண்டறிதல் இலவச சிறப்பு முகாம்



**காரைக்கால், மார்ச் 8-**

காரைக்கால் மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறை மற்றும் அப்போலோ மருத்துவமனையுடன் இணைந்து, 18 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு நடத்திய இருதயநோய் கண்டறிதல் இலவச சிறப்பு முகாம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

மத்திய அரசின் ராஷ்ட்ரிய பால் ஸ்வஸ்த்யா காரியக்ரம், ஆர்பிஎஸ்கே திட்டத்தின் கீழ், பிறந்த குழந்தைகள் முதல் 18 வயது வரை உட்பட்டவர்களுக்கு, இருதயநோய் கண்டறிதல் இலவச சிறப்பு முகாம், நேற்று காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில், குழந்தைகள் நல பிரிவில் நடைபெற்றது. இச்சிறப்பு முகாமை காரைக்கால் நலவழித்துறை துணை இயக்குனர் டாக்டர் சிவராஜ்குமார், அரசு ஆஸ்பத்திரி மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் கண்ணகி, மற்றும் உள்ளிருப்பு மருத்துவ அதிகாரி டாக்டர் பார்த்திப விஜயன் ஆகியோர் தொடங்கி வைத்தனர். இச்சிறப்பு முகாம் நேற்று காலை 10:30 மணி அளவில் தொடங்கி பிற்பகல் 1 மணி வரை நடைபெற்றது.

மேலும் சென்னை அப்போலோ மருத்துவமனையில் இருந்து குழந்தைகள் இருதய சிகிச்சை நிபுணர்கள் இம்முகாமில் கலந்துகொண்டு, காரைக்கால் அரசு ஆஸ்பத்திரியில் குழந்தைகள் பிரிவு மருத்துவர்களின் உதவியோடு குழந்தைகளுக்கு பரிசோதனைகள் மேற்கொண்டனர். ஏராளமான பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை ஆர்வமுடன் முகாமிற்கு அழைத்து வந்தனர். மொத்தமாக 46 குழந்தைகளுக்கு எக்கோ மூலம் இருதய பரிசோதனைகள் செய்யப்பட்டது. அதில் காரைக்கால் மாவட்டத்தைச் சேர்ந்த 3 குழந்தைகளுக்கு பிறவி இருதய நோய் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து 3 குழந்தைகளுக்கும் அறுவை சிகிச்சை மற்றும் மேல் சிகிச்சைகள் மத்திய அரசின் திட்டத்தின் கீழ் இலவசமாக சென்னை அப்போலோ மருத்துவமனையில் அடுத்த வாரம் நடத்தப்பட உள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வளர்ச்சித்திட்ட பணிகளை மேயர் ஆய்வு



**கோவை, மார்ச் 8-**

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை மேயர் ரங்கநாயகி ராமச்சந்திரன் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

அதன்படி, கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலம், வார்டு எண்.78க்குட்பட்ட கபூர்பாய் லேஅவுட் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் மாநகராட்சி இடத்தில் பூங்கா மற்றும் நூலகம் அமைப்பது குறித்தும், ஐ.யூ.டி.பி.காலனி பகுதியில் கூடுதலாக பொதுக்கழிப்பிடம் கட்டுவது தொடர்பாகவும் மேயர், நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, அப்பகுதியில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவுகள் குறித்து அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, வார்டு எண்.94க்குட்பட்ட சுந்தராபுரம் பிரதான சாலையில் கோடைகால வெப்பம் அதிகமாக உள்ளதால் கோயம்புத்தூர் மாநகராட்சி சார்பில் நீர் மோர் பந்தல் அமைக்கப்பட்டுள்ளதை மேயர், நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்து, பொதுமக்களுக்கு நீர்மோர் மற்றும் தர்பூசணி பழங்களை வழங்கினார்.

மேலும், வார்டு எண்.91க்குட்பட்ட செங்குளம், குளத்துப்பாளையம் பகுதியில் ரூ.11.39 லட்சம் மதிப்பீட்டில் குளக்கரைகளின் ஸிசிசி தாங்குச்சுவர் கட்டுமானப் பணியினையும், வார்டு எண்.97க்குட்பட்ட குறிச்சி குனியமுத்தூர், வி.எஸ்.என்.கார்டன் பகுதியில் உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டத்தின் கீழ் விடுபட்ட இடங்களில் குடிநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெற்று வருவதையும் மேயர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, தெற்கு மண்டல தலைவர் தனலட்சுமி, உதவி ஆணையர் குமரன், உதவி செயற்பொறியாளர் கனகராஜ், மாமன்ற உறுப்பினர் சிவசக்தி, மண்டல சுகாதார அலுவலர் ஆண்டியப்பன், உதவி பொறியாளர்கள் ஏஞ்சலினா, சபரிராஜ், ஜெகதீஸ்வரி மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

தினமும் மாலையில் மாலை எக்ஸ்பிரஸ் படியுங்கள்

# ஜெ.ஜி நர்சரி-பிரைமரி பள்ளி ஆண்டு விழா



திருவெண்ணெய்நல்லூர், மார்ச் 8-

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய் நல்லூர் பேரூராட்சியில் ஜெ.ஜி நர்சரி – பிரைமரி பள்ளியில் ஆண்டு விழா வெகு விமர்ச்சையாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பள்ளியின் தாளாளர் கார்த்திகேயன் தலைமை தாங்கினார். பள்ளி முதல்வர் ஹேமலதா குபேந்திரன் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினர்களாக காவல் ஆய்வாளர் மைக்கேல் இருதயராஜ், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ஜோதி ஆகியோர் கலந்துகொண்டு பள்ளி குழந்தைகளுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தனர். அதனைத்தொடர்ந்து பள்ளி குழந்தைகளின் ஆடல், பாடல், கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. இறுதியாக ஆசிரியர் மீனா நன்றி கூறினார். இதில் பள்ளி ஆசிரியர்கள், அலுவலக ஊழியர்கள், பெற்றோர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி






சேலம், மார்ச் 8-

முஸ்லிம்களின் வஃக்ப் உரிமையை காப்போம் என்ற தலைப்பில் எஸ்டிபிஐ கட்சி தெற்கு தொகுதி சார்பாக சமூக நல்லிணக்க இஃப்தார் நிகழ்ச்சி எஸ்ஆர் எஸ் அம்மன் சமூக கூடத்தில் தெற்கு தொகுதி தலைவர் சேட்டு தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியினை கிழக்கு மாவட்ட மருத்துவ அணி பொறுப்பாளர் முகமத் அனிபா தொகுத்து வழங்கினார். தெற்கு தொகுதி செயலாளர் சாதிக்பாஷா வரவேற்புரையாற்றினார். கிழக்கு மாவட்ட பொதுச்செயலாளர் முஹம்மது விக்காயத்துல்லா, மாவட்ட துணைத்தலைவர் பிலால், மாவட்ட அமைப்பு பொதுச்செயலாளர் சையது அலி, மாவட்ட பொருளாளர் முபாரக், மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜாகிர் உசேன், எஸ்டிடியு மாவட்ட செயலாளர் நிஜாம் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

கிழக்கு மாவட்ட தலைவர் அப்சர் அலி துவக்க உரையாற்றினார். கட்சியின் மாநில பொதுச்செயலாளர் அபுபக்கர் சித்திக், நூருல் இஸ்லாம் அரபிக்கல்லூரி முதல்வர் மௌலான மௌலவி, முகமது யஹ்யா தாவூதி, ஜங்ஷன் பெந்தகோஸ் சர்ச் ஃபாதர் கதிர், அ.தி.மு.க தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பாலசுப்ரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

மேலும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம் கே.செல்வராஜ், முன்னாள் கவுன்சிலர் பாலு, அம்மாபேட்டை பகுதி 3 கழக செயலாளர் அபுபாய் (எ) மஹபூப் அலி, எஸ்டிபிஐ கட்சியின் தேசிய பொதுக்குழு உறுப்பினர் அம்ஜத் பாஷா, மாநில வர்த்தகர் அணி செயலாளர் ஸலாவுதீன், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் ஷெரீப் பாஷா, கிழக்கு மாவட்ட வர்த்தக அணி செயலாளர் இக்பால் சேட்டு, வீர பாண்டி தொகுதி பொறுப் பாளர் பக்கூர், ஐடி விங் மாவட்ட தலைவர் முஹம்மது ஹாரிஸ் ஆகியோர் சிறப்பு அழைப் பாளர்களாக கலந்து கொண்டனர். இறுதியாக தெற்கு தொகுதி பொரு ளாளர் திப்பு சுல்தான் நன்றியுரையாற்றினார்.

# திமுக கொடியேற்று விழா







தூத்துக்குடி, மார்ச் 8-

ஆசூர்தளவாய் புரத்தில் திமுகவினர் தமிழக முதல்வர் ஸ்டாலின் பிறந்த தினத்தை முன்னிட்டு மதுரை மெயின் ரோட்டில் தளவாய்புரம் கிராமத்தில் புதியதாக 72அடி உயர புதிய கம்பம் நாட்டனர். கயத்தாறு மத்திய ஒன்றிய செயலாளர் கருப்பசாமி பாண்டியன் தலைமையில் கட்சி கொடி ஏற்றி வைத்து இனிப்பு வழங்கினார்.

கயத்தாறு பேரூர் கழக செயலாளர் சுரேஷ் கண்ணன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் வெயில்முத்துபாண்டியன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் வெயில்முத்து, மத்திய ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் கருணாநிதி, கூட்டுறவு வங்கி தலைவர் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த நிகழ்ச்சியில் சிவணாபுரம் கிளைச் செயலாளர் ஆனந்தராஜ், பொருளாளர் காளியப்பன், வாகைத்தாவூர் கிளைச் செயலாளர் மாணிக்கம், மணிகண்டன், ஆசூர் கிளைச் செயலாளர் சின்ன காந்தாரி, சீகனூர் கிளைச் செயலாளர் ஞானப்பிரகாசம், இளைஞர் அணி செயலாளர் ஆசூர் சின்னகாளிப் பாண்டியன், கோவில்பட்டி நிர்வாகிகள் பூல்பாண்டியன், மூவேந்தர் முன்னேற்றக் கழக மாவட்டத் தலைவர் குமார், உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# வங்கி ஊழியர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்




காரைக்கால் வங்கி தொழிற்சங்கங்களின் ஒருங்கிணைப்பு குழு சார்பில், வாரத்தில் 5 நாள் வேலை, காலி பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அனைத்து வங்கி ஊழியர்கள் நேற்று மாலை கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# காரைக்கால்-நெடுங்காடு மெயின் சாலையில் கோழிக்கழிவுகளை கொட்டும் சமூகவிரோதிகளால் நாய் தொல்லை-கட்டுக்குள் கொண்டு வர மக்கள் வலியுறுத்தல்

காரைக்கால், மார்ச் 8-

காரைக்கால் –நெடுங்காடு மெயின் சாலையில் கோழிக்கழிவுகளை கொட்டும் சமூகவிரோதிகளால்,, நாய்கள் தொல்லை அதிகரித்துள்ளது. உடனே கட்டுக்குள் கொண்டு வர பொதுமக்கள் வலியுறுத்தியுள்ளனர்.



காரைக்கால் நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்துக்கு உட்பட்ட மேல காசாக்குடி முதல் நெடுங்காடு செல்லும் மெயின் சாலை மற்றும் பொன் பேத்தி சாராயக் கடை செல்லும் சந்திப்பில், கடந்த சில வாரமாக சமூக விரோதிகள் கோழி கழிவுகளை அதிக அளவில் கொட்டி வருவதால், நாய்கள் கூட்டம் அங்கு பெருமளவில் கூடுவதாலும், கோழி கழிவுகளை இழுத்துக்கொண்டு சாலையில் திடீரென செல்வதால் அடிக்கடி விபத்துக்கள் நடந்தவண்ணம் உள்ளது. சாலையில் செல்வோரை சில நாய்கள் விரட்டி கடித்தும் வருகிறது. இதனால் நெடுங்காடு பகுதிக்கு செல்லும் ஏராளமான பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், குழந்தைகளை ஏற்றி செல்லும் பெற்றோர்கள், வியாபாரிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே சம்பந்தப்பட்ட நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து ஆணையர் சம்பந்தப்பட்ட இடத்தை உடனடியாக ஆய்வு செய்து, கோழிக்கறிவுகளை கொட்டாமல் நிரந்தர தீர்வு காண முன்வர வேண்டும். மேலும் கோழிக்கறிவுகளை கொட்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி உள்ளனர். இல்லையென்றால் கொம்யூன் பஞ்சாயத்து வாசலில் போராட்டத்தில் ஈடுபட வேண்டி இருக்கும் என பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கதிர்காமம் தொகுதி இளைஞர் அணி தலைவர் நியமனம்



புதுச்சேரி அகில இந்திய என்ஆர் காங்கிரஸ் புதுவை மாநிலம் தலைவரும், முதல் அமைச்சருமான ரங்கசாமி ஒப்புதலின்படி என்.ஆர் காங்கிரஸ் மாநில இளைஞர் அணி தலைவரும், கதிர்காமம் சட்டமன்ற உறுப்பினர் ரமேஷ் பிரோம் என்பவரை கதிர்காமம் தொகுதிக்கு இளைஞர் அணி தலைவராக அறிவித்துள்ளார்.

# உலக மகளிர் தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில் 'மிஷன் வீரமங்கை' திட்டம்-கவர்னர், முதலமைச்சர் துவக்கி வைப்பு



புதுச்சேரி, மார்ச் 8-

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு புதுச்சேரியில் 'மிஷன் வீரமங்கை' திட்டம் துவக்க விழா, புதுச்சேரி கடற்கரை சாலை, காந்தி திடலில் நேற்று நடந்தது.

விழாவில் கவர்னர் கைலாஷ் நாதன், முதலமைச்சர் ரங்கசாமி ஆகியோர் பங்கேற்று திட்டத்தை துவக்கி வைத்து, காவல்துறையில் சிறந்து விளங்கிய 32 பெண் காவலர்களுக்கு விருது வழங்கினர்.

விழாவில் அமைச்சர்கள் நமச்சிவாயம், லட்சுமி நாராயணன், தலைமை செயலர் சரத் சவுகான், டி.ஜி.பி., ஷாலினி சிங், ஐ.ஜி., அஜித்குமார் சிங்லா, டி.ஐ.ஜி., சத்தியசுந்தரம், கலெக்டர் குலோத் துங்கன் மற்றும் காவல் துறை உயரதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வீரமங்கை பயிற்சி திட்டத்தில் சிறப்பாக செயல்பட்ட பெண் காவலர்கள், பள்ளி, கல்லூரி மாணவிகள் அனைவருக்கும் விருதுகள் மற்றும் சான்றிதழ் வழங்கி சிறப்பிக்கப்பட்டது. பெண் காவலர்கள் மற்றும் மாணவிகளின் வீர தீர சாகசங்கள் மேடையில் நிகழ்த்தப்பட்டது.

விழாவில் உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பேசும்போது 'சமூக குற்றங்கள், போதைப் பொருள் குற்றங்கள், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் எதுவாக இருந்தாலும் அதனை ஆரம்பத்திலேயே கண்டறிந்து தடுக்க வேண்டும் என்பதுதான் காவல்துறையின் நோக்கம். அதன் அடிப்படையில் தான் மிஷன் வீரமங்கை திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

அனைத்து பள்ளிகள், கல்லூரிகளில் செயல்படுத்தப்பட்டு, பெண் பிள்ளைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் இத்திட்டம் செயல்படும். இவ்வாறு அவர் பேசினார்.

இத்திட்டத்தின் மூலம், புதுச்சேரியில் உள்ள அனைத்து கல்லூரி, பள்ளிகளுக்கு பெண் போலீசார் நேரடியாக சென்று மாணவிகளுக்கு எதிராக நடக்கும் வன்கொடுமைகள், பாலியல் சீண்டலுக்கு எதிராக விழிப்புணர்வு ஏற்படுத்துவது, அசாதாரணமான சூழ்நிலையில் மாணவிகள் தங்கள் கையில் உள்ள சிறு ஆயுதத்தையும் பயன்படுத்தி எவ்வாறு தங்களை பாதுகாத்துக் கொள்வது உள்ளிட்ட தற்காப்பு கலை பயிற்சிகள் அளிக்க உள்ளனர்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
• சனி • மார்ச் 8, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

# 9 மாவட்டங்களில் புதிய தோழி விடுதிகள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

**சென்னை, மார்ச் 8–**

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி 'பிங்க் ஆட்டோ' உள்பட பெண்களுக்கான பல்வேறு சிறப்பு திட்டங்களை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கி வைத்தார். ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8ம் தேதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இதையொட்டி தமிழக அரசின் சார்பில் பெண்களுக்கான பல்வேறு நலத்திட்டங் களை முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

அதன்படி சமூக நலத்துறை மற்றும் மகளிர் மேம்பாட்டுத் துறை சார்பில் கடந்த ஆண்டு சட்டசபை கூட்டத்தொடரில் அறிவிக்கப்பட்ட மகளிர் 'பிங்க் ஆட்டோ' திட்டத்தை சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற 'உலக மகளிர் தின விழா' நிகழ்ச்சியில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் முதல்கட்டமாக 250 பெண் ஓட்டுநர்கள் தேர்வு செய் யப்பட்டு, சென்னையில் 'பிங்க் ஆட்டோ' சேவையை வழங்கினார். இவர்களுக்கு ஆட்டோக்கள் வாங்க ஒரு லட்சம் ரூபாய் வரை அரசு மானியம் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. அதைத்தொடர்ந்து நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் கீழ் செயல்பட்டு வரும் மகளிர் சுயஉதவிக் குழுக்களில் உள்ள மகளிர் பயன்பெறும் வகையில் ரூ.3,000 கோடி மதிப்பீட்டில் வங்கிக் கடன் இணைப்புகள் வழங்கப் பட்டன.அதேபோல், மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கு அடை யாள அட்டைகள், பல்வேறு துறைகளில் சாதனை படைத்த பெண்களுக்கு விருதுகள் உள்ளிட்டவற்றை வழங்கி முதல்அமைச்சர் மு.க. ஸ்டாலின் சிறப்பித்தார்.

இந்நிலையில் பணிபுரியும் பெண்களுக்க ாக பல்வேறு மாவட்டங்களில் அமைக்கப் பட்டு செயல்பாட்டில் இருந்துவரும் 'தோழி' மகளிர் விடுதி திட்டத்தின் விரிவாக்கம் உள்பட மேலும் பல புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளும் இன்று வெளியிடப்பட்டது.

இதன்படி காஞ்சிபுரம், ஈரோடு, தருமபுரி, சிவகங்கை, கடலூர், நாகை, ராணிப்பேட்டை, தேனி, கரூர் ஆகிய 9 மாவட்டங்களில் ரூ. 72 கோடியில் 700 படுக்கைகளுடன் புதிய தோழி விடுதிகள் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள் ளது.இதனைத்தொடர்ந்து தமிழ்நாடு அரசு சார்பில் நடத்தப்படும் மகளிர் தின விழாவில் பேசிய முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின், "விழாவிற்கு வந்துள்ள அனைத்து பெண்களுக்கும் மகளிர் தின வாழ்த் ணதுகள்.. நாளும் கிழமையும் நலிந் தோருக்கில்லை... ஞாயிற்றுக் கிழமையும் பெண்களுக்கு இல்லை என்பார்கள். பெண்கள் இல்லாமல் ஆண்கள் இல்லை என்பதை உணர்ந்த ஆண்கள் நாங்கள்.

பெண் விடுதலைக்காக வாழ்நாள் முழுவதும் உழைத்தவர் பெரியார். திராவிட இயக்கத்தின் பேதமே ரத்த பேதம், பால் பேதம் இல்லை என்பதாகும். பெரியார் வழி வந்த அண்ணா, சுயமரியாதை திருமணத்தை சட்டமாக்கினார்.

பெண்கள் கடமையை செய்ய மட்டும் பிறந்தவர்கள் அல்ல..உரிமையை பெறவும் பிறந்தவர்கள். 9 மாவட்டங்களில் 72 கோடி மதிப்பில் 700 படுக்கை வசதிகளுடன் தோழி விடுதிகள் அமைய உள்ளன. இதன்படி காஞ்சிபுரம், ஈரோடு, சிவகங்கை, தருமபுரி, கரூர், தேனி, கடலூர், ராணிப் பேட்டை, நாகை ஆகிய மாவட்டங்களில் தோழி விடுதிகள் அமைக்கப்படும்.

பெண்களின் உரிமையை உறுதி செய்யும் ஆட்சியாகதி.மு.கசெயல்படுகிறது. ஆணாதிக்க மனோபாவம் குறைய வேண்டும். பெண்கள் கடமையை செய்ய மட்டும் பிறந்தவர்கள் அல்ல..உரிமையை பெறவும் பிறந்தவர்கள்" என்று அவர் கூறினார்.

# கடன் உதவிகள் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்கள் ஆலோசனை கூட்டம்



**ஈரோடு, மார்ச் 8–**

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள், கல்வி உதவித்தொகை மற்றும் கடன் உதவிகள் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனை கூட்டம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் சுரேஷ்குமார் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா முன்னிலையில் நடைபெற்றது.

பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் மூன்றாண்டு கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகள், பாலிடெக்னிக்குகளில் மூன்று வருட பட்டயப் படிப்புகள் மற்றும் தொழிற் கல்வி படிப்புகளுக்கு இலவச கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது. அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் கல்வி உதவித்தொகை மற்றும் கடன் உதவிகள் தொடர்பாக துறை சார்ந்த அலுவலர்களுடனான ஆலோசனை மேற்கொண்டு, டாப்செட்கோ திட்டத்தின் கீழ் 2024 –2025 நிதியாண்டிற்கான இலக்கினை எய்திட கூட்டுறவுத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக, ஈரோடு மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகள் விடுதிகள் மற்றும் இத்துறையால் செயல்படுத்தப்படும் கல்வி உதவித்தொகை உள்ளிட்ட திட்டங்கள் குறித்து பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் ஆய்வு மேற்கொண்டு, இந்த ஆய்வின்போது, புஞ்சைபுளியம்பட்டியில் உள்ள அரசு கல்லூரி மாணவிகள் விடுதியினை பார்வையிட்டு விடுதியின் செயல்பாடுகள் மேம்படுத்துவது குறித்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.மேலும்,மாணவிகளின் கல்வி மற்றும் பிற திறன்களை வளர்க்கும் வகையில் அரசு செயல்படுத்தி வரும் அனைத்து திட்டங்களும் அவர்களுக்கு சென்றடைய வேண்டும் என அறிவுறுத்தினார். தொடர்ந்து, நம்பியூர் வட்டம் திட்டமலையில் புதிதாக கட்டப்பட்டு வரும் அரசு கல்லூரி மாணவிகள் விடுதியை பார்வையிட்டு பணிகளை விரைவாக முடிக்க பொதுப்பணி துறையினருக்கு அறிவுறுத்தினார்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு வங்கி பெருந்துறை கிளையில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர், பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலம் தனி நபர் கடனுதவி பெற்று நகலெடுக்கும் நிலையம் மற்றும் இசேவை மையம் ஆகியவற்றை நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு, பயனாளிகளிடம் கலந்துரையாடினார். மேலும் கடனை முறையாக செலுத்துகின்றனரா என அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சக்திவேல், கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர் காலிதாபானு, தனி வட்டாட்சியர் (நிலமெடுப்பு) இளஞ்செழியன், மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் (பெருந்துறை கிளை) மோகனாம்பாள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

# நிரவி அரசு மேல்நிலை பள்ளியில் கணித மன்றம் துவக்க விழா

**காரைக்கால், மார்ச் 8–**

காரைக்காலை அடுத்த நிரவி அரசு மேல்நிலைப் பள்ளியில் "சீனிவாச இராமானுஜன் கணித மன்றத்தின்" துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, பள்ளியின் துணை முதல்வர் சித்ரா தலைமை தாங்கி பேசியதாவது: சுவரில் கரித்துண்டு கொண்டு பால் கணக்கு எழுதிய சமூகம் நம் தமிழ்ச்சமூகம். வானவியல், ஜோதிடம் முதற்கொண்டு இன்றைய கணினி வரை கணிதமே அடிப்படையாய் உள்ளது. அனைத்துப் பணிகளும் சிறப்புற நடப்பதற்கு கணிதப் பார்வை அவசியம் என்றார். ஊழியப்பத்து அரசு உயர்நிலைப் பள்ளி கணித ஆசிரியை அருள்மொழிச்செல்வி சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.



ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் கோபாலகிருஷ்ணன் மற்றும் நூலகர் கீதா ஆகியோர் கணிதம் குறித்து சிறப்புரையாற்றினர். கணித மேதைகள் ராமானுஜம் மற்றும் சகுந்தலா தேவி அம்மையார் குறித்து நினைவு கூர்ந்தனர். கணித உபகரணங்கள் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப் பட்டன. நிகழ்ச்சியின் இறுதியாக விரிவுரையாளர் ஹரிணி நன்றியுரை வழங்கினார். பட்டதாரி ஆசிரியர் சிங்காரவேலு நிகழ்ச் சியினைத் தொகுத்து வழங்கினார். விழாவிற்கான ஏற்பாடுகளை அனைத்து ஆசிரியர்களும் சிறப்பாக செய்திருந்தனர்.

# தேயிலையின் தரம் குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம்

**கோவை, மார்ச் 8–**

கோவையில் தென்னிந்திய தேயி லையின் தரம் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்கும் விதமாக 2 நாள் கருத்தரங்கம் கோவை அவினாசி சாலையில் உள்ள ஜென்னிஸ் ரெசிடென்சி அரங்கில் நடைபெற்றது. கோயம்புத்தூர் தேயிலை வர்த்தக சங்கம், இந்திய தேயிலை வாரியம், தென்னிந்திய ஐக்கிய தோட்டக்கார ர்கள் சங்கம், அகில இந்திய தேயிலை வர்த்தகர்கள் சங்க கூட்டமைப்பு மற்றும் கொச்சின் தேயிலை வர்த்தக சங்கம் ஆகியோர் இணைந்து நடத்தியது. இதில், இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் தேயிலை உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் என துறை சார்ந்தவர்கள் பலர் கலந்துகொ ண்டனர். இரண்டு நாள் நடைபெற உள்ள கருத்தரங்கில் தேயிலை உற்பத்தி வர்த்தகம் தொடர்பான சவால்கள் குறித்த அமர்வுகள், தேநீர் ருசி பார்த்தல், கோல்டன் லீஃப் இந்தியா விருதுக ளுக்கான தேநீர் தேர்வு, வாங்குபவர்



விற்பனையாளர் சந்திப்பு மற்றும் தென்னிந்திய தேயிலைகளின் மேம்பட்ட தரத்தை வெளிப்படுத்தும் கண்காட்சிகள் ஆகியவை இடம்பெற்றன. கருத்தரங்கில் ஒருங்கிணைப்பாளரும், தென்னிந்திய தேயிலை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் தீபக் ஷா தலைமை தாங்கினார். விழாவில் பேசிய இந்திய தேயிலை வாரிய செயல் இயக்குனர் முத்துக்குமார், தென்னிந்திய தேயிலைகளின் தரம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியம் என குறிப்பிட்ட அவர், இதில் தேயிலை களில் செயற்கை வர்ணங்கள் சேர்ப்பதை தடுக்க அதிக அளவிலான சவால்கள் இருப்பதாக கூறினார். முன்னதாக காலையில் ரேஸ்கோர்ஸ் பகுதியில், தென்னிந்திய தேயிலையின் ஆரோக்கிய பயன்கள் குறித்து விழிப் புணர்வு வாக்கதான் நடைபெற்றது. இதில் 500க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு இலவசமாக தேநீர் வழங்கி தேயிலை குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

# மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாமில் 135 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை அமைச்சர் வழங்கினார்

**நாமக்கல், மார்ச் 8–**

நாமக்கல் மாவட்டம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ரெட்டிப்புதூர், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், வேட்டாம்பாடி, சிவியம்பாளையம் மற்றும் மோகனூர் ஊராட்சி ஒன்றியம், லத்துவாடி, ஒருவந்தூர் ஆகிய ஊராட்சிகளில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் மக்களுடன் முதல்வர் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்களில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் ராமலிங்கம், மேயர் கலாநிதி ஆகியோர் முன்னிலையில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டு 135 பயனாளிகளுக்கு ரூ.44.65 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாமில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திடும் வகையிலும், அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்திடும் வகையிலும், உரிய காலத்தில் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பல்வேறு திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றார்கள். மேலும், கடைகோடி கிராம பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கும் அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் எளிதாக கிடைக்கும் வகையிலும், பொதுமக்களுக்கு அரசின் சேவைகள் விரைவாகவும் எளிதாகவும் சென்று சேரும் வகையிலும், "மக்களுடன் முதல்வர்" என்ற திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். தற்போது, ஏழை, எளிய மக்களின் குறைகளை நிறைவேற்ற சிறப்பு கவனம் செலுத்திட மூன்றாம்



கட்டமாக முகாம்கள் நடத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

பொதுமக்கள் அரசுத்துறைகளை தேடி வந்து மனுக்களை அளித்த நிலையை மாற்றி அரசுத்துறை அலுவலர்கள் பொதுமக்களை நேரடியாக சந்தித்து அவர்களது கிராமங்களுக்கே சென்று மனுக்களை பெற்று தீர்வு வழங்கி வருகின்றார்கள். இதன் மூலம் மக்களின் நீண்ட கால கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி இன்றைய தினம் நாமக்கல் சட்டமன்ற தொகுதி, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், ரெட்டிப்புதூர், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், வேட்டாம்பாடி, சிவியம்பாளையம் மற்றும் மோகனூர் ஊராட்சி ஒன்றியம், லத்துவாடி, ஒருவந்தூர் உள்ளிட்ட ஊராட்சிகளில் மூன்றாம் கட்டமாக முகாம்கள் நடத்தப்படுகிறது. பொதுமக்கள் இம்முகாம்களை பயன்படுத்தி கொண்டு தங்கள் கோரிக்கைகளை மனுக்களாக வழங்கி பயன்பெறுமாறு தெரிவித்தார்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் ஆட்சிப்பொறுப்பேற்ற பிறகு நாமக்கல் மாவட்டத்தில் கடந்த 2021 முதல் 2025 வரை கலைஞர் கனவு இல்லம், ஊரக வீடுகள் பழுது பராமரிப்பு திட்டம், பிரதான் மந்திரி கிராம குடியிருப்பு திட்டம், சாலை பணிகள், குடிநீர் திட்ட பணிகள், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், சிறுபாலம் அமைத்தல், சுகாதார பணிகள், தடுப்பணை, விளையாட்டு மைதானம் அமைத்தல் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், நவணி தோட்டக்கூர்பட்டி ஊராட்சியில் 5.8.60 கோடி மதிப்பீட்டில் 245 திட்டப்பணிகள். நாமக்கல் ஊராட்சி ஒன்றியம். வேட்டாம்பாடி ஊராட்சியில் ரூ.5.97 கோடி மதிப்பீட்டில் 176 திட்டப்பணிகள், சிவியாம்பாளையம் ஊராட்சியில் ரூ.2.95 கோடி மதிப்பீட்டில் 140 திட்டப்பணிகள், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், லத்துவாடி ஊராட்சியில் ரூ.7 கோடி மதிப்பீட்டில் 213 திட்டப்பணிகள் மற்றும் ஒருவந்தூர் ஊராட்சியில் 15.7.97 கோடி மதிப்பீட்டில் 365 திட்டப்பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் ராஜேஸ்குமார் தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அரசாங்கத்தின் முதல் பணியாளர்கள் தூய்மை பணியாளர்கள் தான் என தெரிவித்து தூய்மை பணியாளர்களின் நலன் காக்க பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள். தூய்மை காவலர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்திட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி அவர்களுக்கு வழங்கி வந்த ஊதியத்தை ரூ.5,000ஆக உயர்த்தினார்கள். மேலும், முதியோர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த உதவித்தொகையை ரூ.1,500ஆக உயர்த்தி வழங்க உத்தரவிட்டார்கள். மேலும், மகளிருக்கு பேருந்துகளில் கட்டணமில்லா இலவச விடியல் பயணம், மாதம் ரூ.1,000 வழங்கும் மகளிர் உரிமை தொகை திட்டம், விவசாய கடன் தள்ளுபடி, 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன் தள்ளுபடி, மகளிர் சுய தொழில் தொடங்கிட கடனுதவி, பெண்கள் உயர்கல்வி பயில்வதை ஊக்குவித்திட மாதம் ரூ.1,000 வழங்கும் புதுமைப் பெண் திட்டம், மாணவர்களுக்கு மாதம் ரூ.1,000 வழங்கும் தமிழ்ப்புதல்வன் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், பொதுமக்களின் நலன் காக்க மக்களைத் தேடி மருத்துவம், கொரோனா காலத்தில் மாணவர்களின் கல்வியை பாதுகாக்க இல்லம் தேடி கல்வி உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்கள்.

மேலும், ஏழை, எளிய மக்களுக்கு சுத்தகரிக்கப்பட்ட குடிநீர் கிடைக்க வேண்டுமென்ற உன்னத நோக்கத்தில் இராசிபுரம் சுற்றுவட்ட பகுதி மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்திடும் வகையில் ரூ.845 கோடி மதிப்பீட்டில் இராசிபுரம் கூட்டு குடிநீர் திட்ட பணிகள் அறிவித்து பணிகள் நடைபெற்று வருகிறன. இந்த ஆண்டு இறுதிக்குள் தீபாவளி பண்டிகை காலத்தில் காவிரி குடிநீர் இப்பகுதி மக்கள் அனைவருக்கும் கிடைக்கும். மேலும், பல்வேறு பகுதிகளில் நீர்த்தேக்கத்தொட்டிகள், சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகிறது. கால்நடை வளர்ப்போருக்கு உதவிடும் வகையில் நடமாடும் கால்நடை ஊர்தி சேவை தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தேவைப்படின் 1962 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தொடர்பு கொண்டு கால்நடை ஊர்தி சேவையை தங்கள் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்க பயன்படுத்தி கொள்ளலாம் என தெரிவித்தார்.

தொடர்ந்து ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் வருவாய்த்துறை. கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை. மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மகளிர் திட்டம், தொழிலாளர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் தாட்கோ உள்ளிட்ட அரசுத்துறைகள் சார்பில் நாமக்கல் சட்டமன்ற தொகுதி, புதுச்சத்திரம் ஊராட்சி ஒன்றியம், நவணி தோட்டக்கூர்பட்டி, ரெட்டிப்புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 22 பயனாளிகளுக்கு ரூ.11.49 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், நாமக்கல் ஊராட்சி ஒன்றியம், வேட்டாம்பாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் 12 பயனாளிகளுக்கு 5.5,312 மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், சிவியம்பாளையத்தில் 21 பயனாளிகளுக்கு ரூ.13.00 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், லத்துவாடி அறிஞர் அண்ணா கலைக்கல்லூரியில் 28 பயனாளிகளுக்கு ரூ.10.09 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் மற்றும் ஒருவந்தூர் ஊராட்சியில் 52 பயனாளிகளுக்கு ரூ.10.06 லட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகள் என மொத்தம் 135 பயனாளிகளுக்கு ரூ.44.65 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இம்முகாம்களில் துணை மேயர் பூபதி, அட்மா குழுத்தலைவர் கௌதம் (புதுச்சத்திரம்), பழனிவேல் (நாமக்கல்), பெ.நவலடி (மோகனூர்), மாவட்ட வருவாய் அலுவலர் மருத்துவர் சுமன், நாமக்கல் மாநகராட்சி ஆணையாளர் ரா.மகேஸ்வரி, திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) கு.செல்வராசு, தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) பிரபாகரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.கிருஷ்ணவேணி, முகாம் பொறுப்பு அலுவலர்கள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி

# பெண்களின் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைத்து பாதுகாப்பான வாழ்க்கை சூழலை உருவாக்குவதில் ஒன்றிணைந்து செயல்படுவோம்

## கவர்னர், முதல்வர், தலைவர்கள் மகளிர் தின வாழ்த்து

**புதுச்சேரி, மார்ச் 8–**

புதுச்சேரி கவர்னர் கைலாஷ்நாதன் விடுத்துள்ள மகளிர் தின வாழ்த்து செய்தி:

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண்கள் அனைவருக்கும் என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு சமுதாயம் முற்போக்கான ஆரோக்கியமான சமுதாயமாக உருவாக வேண்டும் என்றால் அங்கே பெண்கள் உரிமையும், அதிகாரமு,ம் சமூகப் பாதுகாப்பும் பெற்று வாழ வேண்டும். எத்தனை சட்டங்கள், திட்டங்களுக்கு பிறகும் சமுதாயத்தில், பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் இன்னும் தொடர்ந்து வருகிறது.

பெண்களுக்கு மதிப்பளித்து, சம உரிமை அளிக்கும் சமத்துவ மனநிலை சமுதாயத்தில் ஏற்பட வேண்டும். அதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி சமுதாய மாற்றத்தை விரைவுபடுத்த வேண்டும் என்பதை இந்த நாள் வலியுறுத்துகிறது. பெண்களின் முன்னேற்றத்திற்கான தடைகளை உடைத்து அவர்களுக்கான உரிமைகளை வென்று எடுப்பதில், பாதுகாப்பான வாழ்க்கை சூழலை உருவாக்குவதில் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவோம். வளர்ச்சி அடைந்த இந்தியாவை, வளமான புதுச்சேரியை உருவாக்க உறுதி ஏற்போம்.

**முதல்வர் ரங்கசாமி:** நம் உலகிற்கு பெண்கள் செய்யும் பங்களிப்பை அங்கீகரித்து, பாராட்டி, கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 8ஆம் நாள் ‘சர்வதேச மகளிர் தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது. இன்றைய மகளிர், கல்வி, விளையாட்டு. அரசியல், தொழில், அறிவியல், தகவல் தொழில்நுட்பம் என அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கி தேசத்திற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். ஒரு சமூகத்தின் முன்னேற்றம் என்பது அந்த சமூகத்தில் உள்ள பெண்களின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது. பெண்களுக்கு சம உரிமைகள் மற்றும் சம வாய்ப்புகளை வழங்கி அனைத்துத் துறைகளிலும் மரியாதை மற்றும் அதிகாரம் பெற்றவர்களாக பெண்கள் முன்னேற வழிவகை செய்வதை எனது அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது. இதற்காக மாதர்குலம் போற்றும் மகத்தான திட்டங்கள் பலவற்றை சிறப்பாக செயல்படுத்தி, சொன்னதைச் செய்யும் அரசாக எனது அரசு விளங்கி வருகிறது.

2025ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின கருப்பொருள், பெண்களுக்கான உரிமைகள், சமத்துவம், அதிகாரம் அளித்தல் போன்றவற்றை விரைவில் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த நாளில், பெண்களின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ள அனைத்தையும் துரிதமாக அப்புறப்படுத்துவதற்கான ஒரு கூட்டு முயற்சியை முன்னெடுக்க நாம் உறுதியேற்க வேண்டும் என்று கூறி அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**அமைச்சர் திருமுருகன்:** “மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா! பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ இந்தப் பாரில் அறங்கள் வளரும், அம்மா!”

என்றார் கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை. இதிலிருந்து நாம் மங்கையரின் மகத்துவத்தை அறியலாம். இத்தகைய பெருமை கொண்ட பெண் இனத்திற்கு எள்ளளவும் தீங்கு நினைக்க வேண்டாம் என அனைவரும் உறுதி கொள்வோம் என கூறி எனதருமை சகோதரிகளுக்கும், தாய்மார்களுக்கும் சர்வதேச மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

**காங்கிரஸ் மாநில தலைவர் வைத்திலிங்கம் எம்பி:** பெண்களுக்கான உரிமைகள், சமத்துவம், அதிகாரம் அளித்தல் ஆகிய செயல்களை துரிதப்படுத்துவது 2025ஆம் ஆண்டிற்கான சர்வதேச மகளிர் தின கருப்பொருள் ஆகும். புதுச்சேரியில் மகளிர்தான் அதிக வாக்காளர்களாக உள்ளனர். அவர்களே தேர்தலில் ஒருவரின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கின்றனர். அந்தவகையில் கடந்த பாராளுமன்ற தேர்தலில் எனது வெற்றியை நிர்ணயித்த புதுச்சேரி மகளிர் அனைவருக்கும் சர்வதேச மகளிர் தினத்தில் மீண்டும் ஒருமுறை நன்றியை தெரிவித்து கொள்கிறேன்.

பெண்கள் உரிமை, சமத்துவம், அதிகாரம் பெற வேண்டும் என்று ஆட்சியாளர்கள் கூறுகின்றனர். ஆனால் அவ்வாறு செயலில் காட்டுகின்றனரா? என்பதை புதுச்சேரி மகளிர் சிந்தித்து பார்க்க வேண்டும். ஏனென்றால் இந்த அமைச்சரவையில் இடம் பெற்று இருந்த ஒரே ஒரு பெண்ணிடம் இருந்தும் உரிமையை, அதிகாரத்தை, சமத்துவத்தை பறித்துவிட்டனர். இதனை கூட்டணியில் உள்ள பாஜகவும் தட்டி கேட்கவில்லை. இதுதான் இந்த ஆட்சியாளர்கள் பேசும் பெண்களின் உரிமை, சமத்துவம், அதிகாரம்.

பெண்கள் சம்பாதிக்கும் பணத்தில் 90 சதவீதத்தை தங்கள் குடும்பத்திற்கே செலவிடுகின்றனர். அந்த குடும்பத்தில் உள்ளவர்கள் பசியால் வாடுவதில்லை. கல்வியில் பின்தங்குவதில்லை. குடும்பங்கள் முன்னேறினால் தான் நாடு முன்னேறும். எனவே பெண்கள் பொருளாதார சுதந்திரம் பெறவும், இந்த ஆண்டின் சர்வதேச மகளிர் தின கருப்பொருள்படி புதுச்சேரி மகளிருக்கான உரிமைகள், சமத்துவம், அதிகாரம் அளித்தல் ஆகிய செயல்கள் துரிதமாக நடைபெறவும் அனைத்து மகளிருக்கும் மகளிர் தின வாழ்த்துக்களை தெரிவித்து மகிழ்கிறேன்.

# ஆரோவில்லில் 25வது ஆண்டு குதிரையேற்றப் போட்டி



**புதுச்சேரி, மார்ச் 8–**

புதுச்சேரி அடுத்த ஆரோவில் பகுதியில் ‘ரெட் எர்த்’ குதிரையேற்ற பயிற்சி பள்ளி சார்பில், 25ம் ஆண்டு தேசிய குதிரையேற்ற போட்டிகள் நேற்று தொடங்கியது.

காலை 6 மணி முதல் 9 மணி வரையும் மாலை 4 மணி முதல் 6 மணி வரை, அலங்கார நடை, தடை தாண்டுதல், உயரம் தாண்டுதல் என பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப்பட்டன.

நேற்று துவங்கிய ஜூனியர் தகுதிச் சுற்றுகள், நாளை 9ம் தேதி வரை நடக்கிறது. வரும் 14ம் தேதி முதல் 16ம் தேதி வரை குதிரையேற்ற போட்டிகள் மற்றும் குதிரை கண்காட்சியும் நடக்கிறது.

இந்த போட்டிகளில் தூத்துக்குடி, ஊட்டி, சென்னை, பெங்களூர், மும்பை உள்ளிட்ட நகரங்களில் இருந்து 100 குதிரைகளும், 200 குதிரையேற்ற வீரர்களும் பங்கேற்றுள்ளனர்.

# தெருநாய்களுக்கு கருத்தடை, தடுப்பூசி போட அறிவுறுத்தல்: பிராணிகள் நல வாரிய கூட்டத்தில் முடிவு



**புதுச்சேரி, மார்ச் 8–**

புதுச்சேரி மாநில பிராணிகள் நல வாரியத்தின் கூட்டம் அமைச்சர் தேனீ. ஜெயக்குமார் தலைமையில், தலைமைச் செயலகத்தில் நேற்று நடந்தது.

அரசு செயலர் நெடுஞ்செழியன், அதிகாரிகள், வாரிய உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை நலத்துறை இயக்குனர் லதா மங்கேஷ்கர், மாநில பிராணிகள் நல வாரியத்தின் குறிக்கோள்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகளை விளக்கி கூறினார்.

கூட்டத்தில் தெரு நாய்களை கட்டுப்படுத்தவும், புதுச்சேரி மாநிலத்தின் நான்கு பிராந்தியங்களின் நகராட்சி மற்றும் கொம்யூன்களில் நிதி ஆதாரத்தை மேம்படுத்தவும் அறிவுறுத்தப் பட்டது. மேலும் பொதுமக்களுக்கு சுகாதாரமான இறைச்சி வழங்கவும், தெருவோர இறைச்சி கடைகளை நெறிமுறைப்படுத்தவும், நவீன இறைச்சிக்கூடம் கட்டுவதற்கும், செல்லப்பிராணிகள் விற்பனை கடைகளுக்கு, செல்லப் பிராணிகள் விதிகள் பதிவு செய்து உரிமம் பெறவும் உள்ளாட்சி துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.

தெருநாய்களுக்கு கருத்தடை, வெறி நோய் தடுப்பூசி போட வேண்டும். வீதிகளில் தெரியும் மாடுகளுக்கு தொழுவம் அமைக்க அறிவுறுத்தப்பட்டது. தெருநாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை செய்ய இந்திய விலங்குகள் நல வாரியத்திடம் இருந்து நிதி கோர பரிந்துரைக்கப்பட்டது.

பிராணிகளை வதை, கொடுமை செய்தல் மற்றும் வன்முறைகளுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்கவும், தடுக்கவும், கால்நடை போக்குவரத்தை ஒழுங்குமுறை படுத்தவும் காவல்துறைக்கு அறிவுறுத்தப்பட்டது.

இரவு நேரங்களில் சாலைகளில் நாய்களால் ஏற்படும் விபத்தை தடுக்க, தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நாய்களின் கழுத்துகளில் ஒளிரும் பட்டைகள், செல்ல பிராணிகளுக்கு மைக்ரோ சிப் பொருத்தவும் முடிவு செய்யப்பட்டது.

# காரைக்காலில் ஆட்டுக்குட்டிக்கு பால் கொடுக்கும் அதிசய நாய்

## ஆர்வமுடன் பார்த்த பொதுமக்கள்



**காரைக்கால், மார்ச் 8–**

காரைக்காலில் ஆட்டுக்குட்டிக்கு பால் கொடுக்கும் அதிசய நாய் பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டு களித்து வருகின்றனர்.

காரைக்கால் திருநகரை அடுத்த பெரிய பேட்டில் பாப் சிம்சன்அனிதா தம்பதியர் களின், கிறிஸ்டினா, எபினேஷன்என்ற இரண்டு குழந்தைகள் வளர்ப்பு வரும் நாயும், ஆடும் கடந்த வாரம் ஒரே நேரத்தில் குட்டிகளை ஈன்றது. இதில் ஆட்டுக்குட்டிகள் தனது தாயை விடுத்து நாயிடம் தொடர்ந்து பால் குடித்து வருகிறது. நாய் தெருவுக்குச் செல்லும் பொழுது, ஆட்டுக்குட்டிகள் ஓடிவந்து நாயிடம் பால் குடிக்கின்றன. நாயும் எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் வாஞ்சையுடன் பால் கொடுக்கிறது. இதனை அப்பகுதி பொதுமக்கள் ஆர்வமுடன் கண்டுகளித்து வருகின்றனர்.

## உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளித்து

# ஊட்டச்சத்து மிக்க உணவை பெண்கள் உட்கொள்ள வேண்டும்: நாமக்கல் மாவட்ட ஆட்சியர் பேச்சு




**நாமக்கல், மார்ச் 8–**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா தலைமையில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, மகளிர் தினம் அனைத்து துறை பெண் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுடன் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தாவது, ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 8 ஆம் நாள் சர்வதேச மகளிர் தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. மகளிராகிய நாம் அனைவரும் இன்று பல்வேறு துறையில் பல்வேறு பதவிகளில் சிறப்பாக பணியாற்றி வருகிறோம். பெண்களாகிய நாம் தாயாக, சகோதரியாக நம் பிள்ளைகளுக்கு குறிப்பாக ஆண் குழந்தைகளுக்கு நல்லவற்றை கற்று கொடுக்க வேண்டும். பெண்களாகிய நமக்கு அலுவலகத்தையும், வீட்டையும் சரியாக வழிநடத்தி செல்லும் திறமை உள்ளது. பெண் குழந்தைகளுக்கு ஆண்கள் தான் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று சிறு வயதிலிருந்தே கற்றுகொடுக்க வேண்டும். மேலும், பெண் குழந்தைகளுக்கு எதிராக பல்வேறு குற்ற செயல்கள் நடைபெற்று வருவது வருத்தத்திற்குரிய ஒன்றாகும். பெண்கள் மன தைரியத்துடன் இருக்க வேண்டும். ஆண், பெண் குழந்தைகளின் பாலின சமத்துவத்துத்தை நாம் உருவாக்கிட வேண்டும். ஆண் குழந்தைகளை நல்ல வழியில் சரியாக வளர்க்க வேண்டியது தாயாக நம் அனைவரது கடமை. ஆண், பெண் அனைவரும் சமம் தான். இன்று நாம் எத்தகைய உயர்பதவியில் இருப்பினும், நம் குழந்தைகள் எந்த உயரத்திற்கு செல்லகிறார்கள் என்பது தான் நம் வெற்றி. வேலையை நாம் இரசித்து செய்திட வேண்டும். பெண்கள் உடல் ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் அளித்து நல்ல ஊட்டசத்து மிக்க உணவை உட்கொள்ள வேண்டும். 40 வயதிற்கு மேற்பட்ட பெண்கள் காட்டாயம் மருத்துவ பரிசோதனைகள் செய்து கொண்டு உடல் ஆரோக்கியத்தை பாதுகாத்திட வேண்டும். நமது அனைத்து வெற்றிக்கும் உறுதுணையாக இருக்கும் நம் வீட்டில் உள்ளவர்களுக்கு நாம் நன்றி தெரிவித்துக்கொள்ள கடமைபட்டுள்ளோம். பெண்கள் மேலும், மேலும் வெற்றிபெற வேண்டும். அனைவருக்கும் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வருவாய் கோட்டாட்சியர்கள் வே.சாந்தி (நாமக்கல்), சே.சுகந்தி (திருச்செங்கோடு), மாவட்ட சமூக நல அலுவலர் தி.காயத்திரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) வ.சந்தியா, வேளாண்மை இணை இயக்குநர் பெ.கலைசெல்வி, மா.புவனேஷ்வரி, தோட்டக்கலைத் மாவட்ட துணை பிற்படுத்தப்பட்டோர் இயக்குநர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் மு.கிருஷ்ணவேணி, பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் வீ.சகுந்தலா உட்பட அனைத்து துறை பெண் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

# தன் புகைப்படம் எடுத்துக்கொண்ட ஆட்சியர்




புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், உலக மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அருணா, தன் புகைப்படம் எடுப்பதற்கான அமைப்பில் தன் புகைப்படம் எடுத்துக்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜராஜன்.

# அரசு அருங்காட்சியகத்தில் கூடுதல் தலைமை செயலாளர் ஆய்வு



வேலூர் கோட்டையில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தில் சுற்றுலா கலை மற்றும் பண்பாட்டுத்துறை கூடுதல் தலைமை செயலாளர் மணிவாசன் ஆய்வு செய்து, கரிகிரி மேஜிக் ஜாரை பார்வையிட்டார். அருகில் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி.

# மதுரை மாநகராட்சி ஆய்வுக் கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் புறக்கணிப்பு

## ஆணையாளரிடம் அதிமுக கவுன்சிலர்கள் மனு



**மதுரை, மார்ச் 8-**

மதுரை மாநகராட்சி சார்பில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்கள் புறக்கணிக்கப்படுவதாக புகார் எழுந்துள்ளது. மதுரை மாநகராட்சி 64வது வார்டில் கடந்த புதன்கிழமை, மண்டலத்தலைவர் சரவண புவனேஸ்வரி தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அதிமுக கவுன்சிலர்களை புறக்கணித்து ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டதாக புகார் எழுந்துள்ளது. இதுகுறித்து மதுரை மாநகராட்சி மாமன்ற எதிர்க்கட்சி தலைவர் சோலை ராஜா தலைமையில் அதிமுக கவுன்சிலர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, மதுரை மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயனிடம் புகார் மனு ஒன்றை அளித்துள்ளனர். அந்த மனுவில் கூறியிருப்பதாவது: "மதுரை மேற்குத் தொகுதிக்கு உட்பட்ட மண்டலம் எண். 2க்கு உட்டுப்பட்ட ஏழு வார்டுகளில் அதிமுக 4 வார்டுகளிலும், திமுக 3 வார்டுகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

இந்நிலையில் 64வது வார்டில் அமைந்துள்ள தனியார் திருமண மண்டபத்தில் (வி.வி.மகால்) மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி தலைமையில், மாநகராட்சியின் உதவி கமிஷனர், உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர்கள், சுகாதார ஆய்வாளர், Ourland மேற்பார்வையாளர்கள் அடங்கிய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தி.மு.க வட்டச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள் மற்றும் தி.மு.க முக்கிய பிரமுகர்கள் அடங்கிய ஆய்வுக் கூட்டத்தில் அ.தி.மு.க கவுன்சிலர்கள் 4 பேரையும் புறக்கணித்துவிட்டு ஆய்வுக் கூட்டத்தை நடத்தியதை வன்மையாக கண்டிக்கிறோம். இத்தொகுதி மக்களை மனுநீதி நாள், குறை தீர்க்கூட்டம் என்ற பெயரில் ஆளுங்கட்சியினர் இது போன்ற கூட்டங்களை நடத்துகின்றனர். ஆனால் அக்கூட்டங்களுக்கு விதிமீறி அரசு அதிகாரிகளை பங்கேற்க கட்டாயப்படுத்துகின்றனர். இது ஆளுங்கட்சி அரசு இயந்திரத்தை தவறாக பயன்படுத்தும் செயல் கண்டிக்கத்தக்கது. இதுபோன்ற நிகழ்வுகள் இனியும் தொடர்ந்துநடவடிக்கைஎடுக்காவிட்டால் அதிமுக சார்பில் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து முறையிடுவோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விபத்து இறப்பு உதவித்தொகை வழங்கல்



அமைச்சர் எ.வ.வேலு திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தூய்மை பணியாளர் நலவாரியத்தைச் சார்ந்த திருவண்ணாமலை வட்டம், நவம்பட்டு கிராமத்தை சேர்ந்த சின்னபொண்ணு என்பவர் பணியின்போது விபத்தில் இறந்ததால் தாட்கோ சார்பாக தூய்மை பணியாளர் விபத்து இறப்பு உதவித்தொகை திட்டத்தின் கீழ் அவரது கணவர் அண்ணாதுரைக்கு ரூ.5,00000க்கான காசோலையினை வழங்கினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ்.

# சாலை வசதிக்காக நிலம் வழங்கிய வாலிபர்



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் சாமிநாதனிடம் மாவட்ட வருவாய் அலுவலர் கார்த்திகேயன் தனது சொந்த நிதியிலிருந்து 5 சென்ட் நிலத்தை அவரது மகன் ஆதவன் பெயரில் நாகப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியை சார்ந்த 95 பட்டாதாரர்கள் பயன்பெறும் வகையில் திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டம், முத்தூர் மேட்டுக்கடை என்.எஸ்.பி.மஹாலில் வருவாய்த்துறையின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சாலை வசதிக்காக வழங்கினார்கள். உடன் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன்.

# திருநெல்வேலி ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மகளிர் தின விழா

**நெல்லை, மார்ச் 8-**

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மகளிர் தின விழாவினை முன்னிட்டு நடைபெற்ற விழாவில் திருநெல்வேலி மாவட்டத்தில் பணிபுரியும் மகளிர்கள் அனைவரும் கலை நிகழ்ச்சிகள், பட்டிமன்றங்கள், பல்வேறு போட்டிகளில் பங்கேற்று சிறப்பாக மகளிர் தின விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் கலந்து கொண்டு கேக் வெட்டி மகளிர் தின வாழ்த்துகளை தெரிவித்து கொண்டு மகளிர்கள் தயாரிக்கப்பட்ட சக்தி மகளிர் இதழை வெளியிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் சுகுமார் தெரிவித்ததாவது, மகளிர் தினத்தை முன்னிட்டு அனைத்து மகளிர்களுக்கு எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாடு முதலமைச்சர் மகளிர்களுக்கு பல்வேறு நலன் சார்ந்த திட்டங்களை கொண்டு வந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மகளிர் சுய உதவி குழுக்களுக்கு பல்வேறு கடன் உதவிகளையும் வழங்கி அவர்கள் சொந்தமாக சுய தொழில் தொடங்குவதற்கும் சிறப்பான திட்டங்களை வழங்கி வருகிறார்கள். மகளிர்கள் எப்பொழுதும் தனி திறமையுடன் செயல்படுவார்கள். அவர்கள் திறமை இந்நாட்டிற்கு மிகவும் முக்கியமானதாகும். மகளிர்கள் தனது குடும்பத்தை மிகுந்த அக்கறையுடன் பார்த்து கொள்வார்கள். இவ்வுலகில் பெண்கள் மிகவும் பெரிய சாதனையாளராக உருவாகி கொண்டிருக்கிறார்கள். பெண்கள் பெரிய உயர் பதவிகளிலும், விஞ் ஞானியாகவும் இருக்கிறார்கள். வேலையில் பணிபுரியும் பெண்கள் குடும்ப பணிகளோடு அலுவலகப் பணிகளையும் சற்றும் களைப்பு இல்லாமல் பார்த்து வருகிறார்கள். மகளிர் தின விழாவில் கலந்து கொள்வதில் மிகவும் பெருமை கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்கள்.

நடைபெற்ற மகளிர் தின விழாவில் 4 மகளிர்கள் உடல் உறுப்பு தானம் ஒப்பந்ததத்தில் கையொப்பமிட்டு உடல் உறுப்பு தானம் செய்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் (சிப்காட்) ரேவதி, மாவட்ட வருவாய் அலுவலர் சுகன்யா, உதவி ஆட்சியர் பயிற்சி அம்பிகா ஜெயின், துணை ஆட்சியர் பயிற்சி ஜெபி, மகளிர் திட்டம் திட்ட இயக்குநர் இலக்குவன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் பொது (பொ) காசி, சமூக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் உமா மற்றும் மகளிர் அரசு ஊழியர்கள், மகளிர் சுயஉதவி குழுக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.




OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007



# சர்வதேச மகளிர் தினத்தில் பிங்க் நிற ஆட்டோ திட்டம்

# வார இறுதியில் உயர்ந்த தங்கம் விலை

# மூன்று வாகனங்கள் மோதி விபத்து-3 பேர் உயிரிழப்பு




# மாலை எக்ஸ்பிரஸ்

Email: maalaiexpresspdy@gmail.com

Website: www.maalaiexpress.com

• 8-3-2025 சனிக்கிழமை • பக்கம் 8 • ரூ.600 காசுகள்